பக்கங்கள்:-25

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 13 | திங்கட்கிழமை | 29.07.2024 | அதிர்வு 363

## நீச்சல் தடாகத்தில் மூழ்கி 7 வயது சிறுவன் மரணம்!

கண்டி, லூயிஸ் பீரிஸ் மாவத்தையில் உள்ள ஹோட்டல் ஒன்றின் நீச்சல் தடாகத்தில் மூழ்கி ஏழு வயது சிறுவன் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

மொஹமட் மிஸ்ஜாத் என்ற 04▶

# தமிழ் - முஸ்லிம் ஒற்றுமை மீண்டும் ஏற்பட வேண்டும்

## அது சமஷ்டி நோக்கிய பயணத்தை இலகுவாக்கும் என்கிறார் சுமந்திரன்




(ந.லோகதயாளன்)

"முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அஷ்ரப் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணியின் அண்ணன் அமிர்தலிங்கம் போல் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒற்றுமை மீண்டும் ஏற்பட்டால் சமஷ்டி நோக்கிய நகர்வுப் பயணம் இலகுவானதாக அமையும்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார். 06▶

## சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது பற்றி பரிசீலிப்போம்

### தமிழரசின் எம்.பி. சிறீதரன் தெரிவிப்பு



(ந.லோகதயாளன்)

"ஜனாதிபதி வேட்பாளர்களில் யாராவது சமஷ்டியை வலியுறுத்தி வடக்கு - கிழக்கில் தமிழர்கள் சுயாட்சியுடன் வாழ்வது தொடர்பாக தேர்தல் விஞ்ஞானத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த வேட்பாளருக்கு ஆதரவு வழங்குவது தொடர்பாக இலங்கைத் தமிழரசுக் கட்சி பரிசீலனை செய்யும்."

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற 06▶




ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் பிரச்சாரப் போக்கு எந்த திசையில் என்பது பெரும்பாலும் இன்று முடிவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சுயாதீன வேட்பாளராகக் களம் இறங்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மொட்டுக் கட்சியின் ஆதரவு கிடைக்குமா அல்லது மொட்டுக் கட்சி தனது சொந்த வேட்பாளராகத் தம்மிக்க பெரேராவை அறிவித்து, ரணிலுக்கு எதிரான பிரச்சாரத்தை முன்னெடுக்குமா என்பது பெரும்பாலும் இன்று மாலை தெரிய வந்து விடும்.

மொட்டுக் கட்சியின் அரசியல் குழுவைச் சேர்ந்த சுமார் அறுபது பேர் இன்று 06▶











# பொலிஸ் மா அதிபர் பிரச்சினைக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படும்

## சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடப்பது உறுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவிப்பு

“அரசமைப்பின் 106 ஆவது சரத்தின் பிரகாரம் நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அதிகாரம் உள்ளது. அதற்கு பூரண ஆதரவை வழங்குவது அனைவரினதும் பூரண கடமை..”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஹோமாகம பஸ்தரிப்பு நிலைய வளாகத்தில் நேற்று நடைபெற்ற ‘ஜெயகமு ஸ்ரீலங்கா’ கொழும்பு மாவட்ட புலம்பெயர் தொழிலாளர் கௌரவிப்பு நிகழ்வில் உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“நாடென்ற வகையில் எம்மால் மீண்டும் எழுச்சி பெற முடியாது என்று சிலர் நினைத்தார்கள். தேர்தலை நடத்த முடியாது போகும் என்றனர். சர்வாதிகார நிலை உருவாகும் என்றனர். தற்போது தேர்தலை நடத்துகிறோம். இன்னும் சிலர் தேர்தலை நான் ஒத்திவைக்கப் போகிறேன் எனக் கூறினார்கள். தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்பதற்காக முதலில் சென்று கட்டுப்பணம் செலுத்தினேன்.

இந்த நெருக்கடி நிலையில் என்ன நடக்கும் என்று சிலர் என்னிடம் கேட்கிறார்கள். பொலிஸ்மா அதிபரை நியமித்த முறை தவறானது என்று கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்யப்பட்டு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அரசமைப்பின் பிரகாரம் உயர் நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுவது அவசியமானது. அதன்படி, சம்பிரதாய முறைப்படி மேன்முறையீடு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டது. இது ஒன்றும் புதிய விடயமல்ல. ஆனால் அதேநேரத்தில், பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்படுகிறார் என உயர் நீதிமன்றம் அறிவித்தது. தாக்கல் செய்யப்பட்ட மனுவின் அடிப்படையில் பொலிஸ்மா அதிபர் தொடர்பில் உத்தரவு வழங்கப்பட்டதாக வெளிப்டையாகத் தோன்றலாம்.

இந்த விடயம் தொடர்பில் மறுநாள் எதிர்க்கட்சித் தலைவர் நாடாளுமன்றத்தில் கருத்துத் தெரிவித்தார். அந்த சமயம் சபாநாயகர் பிரசன்னமாகியிருக்கவில்லை. சபாநாயகர் வந்ததும் பிரதமர் அது தொடர்பில் கேள்வி எழுப்பினார். அரசமைப்பு பேரவை நாடாளுமன்றத்திற்கே சொந்தமானது. எனவே அரசமைப்பு சபையின் உள்ளக செயற்பாடுகளை நீதிமன்றம் ஆராய முடியாது எனவும் இந்த நியமனம் சட்டபூர்வமானது எனவும் சபாநாயகர் அறிவித்தார்.

நியமனம் சட்டவிரோதமானது என்றும் அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் உயர் நீதிமன்றம் கூறியுள்ளது. மறுபுறம், இது சட்டபூர்வமானது என்று நாடாளுமன்றம் அறிவித்துள்ளது. செப்டம்பர் 21 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாரிய பிரச்சினையாக மாறலாம். எனவே, இது குறித்து மகாசங்கத்தினருடன் கலந்துரையாடினேன். தேர்தல் ஆணைக்குழுவுடனும் ஆராயப்பட்டது. இதற்குத் தீர்வுகாண வேண்டும் என அனைவரும் தெரிவித்தார்கள். இன்றேல் இதனால் பொதுமக்கள் தான் பாதிக்கப்படுவார்கள்.

இந்தப் பிரச்சினையை நான் வேறு கோணத்தில் பார்க்கிறேன். பொலிஸ் மா அதிபரின் நியமனத்தையோ, அரசமைப்புக் கவுன்ஸில் கூட்டத்தையோ நான் பார்க்கவில்லை. தேர்தல் என்பது மக்களின் இறையாண்மையின் ஒரு பகுதி என்று அரசியல் சாசனத்தின் 4 ஆவது பிரிவு கூறுகிறது.

தொடர்ச்சி▼















# பொலிஸ் மா அதிபர் பிரச்சினைக்கு ஒரு வாரத்திற்குள் தீர்வு காணப்படும்

## சுதந்திரமான, நியாயமான தேர்தல் நடப்பது உறுதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று அறிவிப்பு

தொடர்ச்சி▲

அந்த மக்களின் இறையாண்மையை நாம் பாதுகாக்க வேண்டும். அரசமைப்பின் 106 ஆவது பிரிவின்படி, நாட்டில் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலை நடத்த தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. நாட்டில் சுதந்திரமான, நியாயமான தேர்தலை நடத்தும் அதிகாரம் ஜுலை 17 முதல் தேர்தல் ஆணைக்குழுவிற்கு கிடைத்தது. இந்தத் தேர்தலை சுதந்திரமாகவும் நியாயமாகவும் நடத்த தேர்தல் ஆணைக்குழுவுக்கு முழு ஆதரவை வழங்குவது நம் அனைவரின் கடமையாகும்.

இந்த மேடையில் எனது படத்தைப் பயன்படுத்த முடியுமா எனத் தேர்தல் ஆணையாளரிடம் மனுஷ நாணயக்கார வினவியிருந்தார். அதை நீக்க வேண்டும் என்று கூறப்பட்டது. அது எனக்குப் பிரச்சினை இல்லை. இவ்வாறான விடயங்களைப் பேசித் தீர்க்க வேண்டும். ஆனால் நாங்கள் இப்படிச் செயல்படும்போது, தேர்தல் ஆணைக்குழுவிடம் இதுபற்றி விசாரிக்க வேண்டிய கடமை உயர் நீதிமன்றத்துக்கும் இருந்தது. அரசமைப்பின் 106 ஆவது பிரிவின் கீழ், பொலிஸ் அதிகாரிகளின் சேவையை பொலிஸ்மா அதிபரின் ஊடாகத் தான் தேர்தல் ஆணைக்குழு பெற முடியும். பொலிஸ் மா அதிபர் இல்லை என்றால், அந்த அதிகாரிகளை எப்படி பெற முடியும்? தேவையான எண்ணிக்கையிலான பொலிஸ் அதிகாரிகளை இந்த வாரம் கோர வேண்டும். பின்னர் கேட்டுப் பெற முடியாது. அந்த நிலையில் தேர்தலை நடத்த முடியாது. எனவே இது மிகவும் முக்கியமான விடயமாகும்.

எனவே, இது குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் ஆராய வேண்டியது உயர் நீதிமன்றத்தின் முதல் கடமையாகும். இந்த விவகாரங்கள் குறித்து தேர்தல் ஆணைக்குழுவிடம் கேட்டு முடிவெடுப்பதே நாடாளுமன்றத்தின் முதன்மைக் கடமையாக இருந்தது. அதை செய்யாததால் தான் பெரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது. தேர்தலை ஒத்தி வைப்பதை நான் விரும்பவில்லை. செப்டம்பர் 21 ஆம் திகதிக்கு பின்னர் வேறு நாளில் தேர்தலை நடத்த நான் தயாராக இல்லை. இந்தத் தேர்தலை எப்படியும் நடத்த வேண்டும் என்று முடிவு செய்தேன். நீங்கள் விரும்பியவருக்கு வாக்களியுங்கள். அது ஒரு பிரச்சினை இல்லை. உங்களுக்கு அந்த உரிமை உள்ளது.

இனி நீதிமன்றம் செல்வதை நிறுத்திக் கொள்வோம். இப்போது நாம் தீர்வு காண வேண்டும். இந்த கண்ணிவெடியை வெடிக்கச் செய்வதா அல்லது செயலிழக்கச் செய்வதா என்பதை நாங்கள் முடிவு செய்ய வேண்டும். இதை வெடிக்க விட முடியாது. இதை பகுதிகளாக பிரித்து செயலிழக்கச் செய்ய வேண்டும். அதற்கு நாடாளுமன்றமும், உயர் நீதிமன்றமும் செயல்பட வேண்டும். எனவே, சபாநாயகர் பிரதம நீதியரசரும் கலந்துரையாடி இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்." – என்றார்.











# சந்தேக நபரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இரண்டு பொலிஸார் பணி இடைநீக்கம்!

## பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் சம்பவம்

(ந.லோகதயாளன்)

பருத்தித்துறை பொலிஸ் நிலையக் குற்றத் தடுப்புப் பிரிவில் பணிபுரியும் இரண்டு பொலிஸார் சந்தேக நபரைத் தாக்கிய குற்றச்சாட்டில் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறையைச் சேர்ந்த சீனிவாசம் கிருபாகரன் எனபவரை சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று தாக்கியுள்ளனர்.

இது தொடர்பில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் விசாரணைகளை மேற்கொண்டார். தாக்குதலுக்கு உள்ளான சந்தேக நபர் பருத்தித்துறை வைத்தியசாலையின் இலக்கம் 07 இலக்க விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தாக்குதல் தொடர்பில் பருத்தித்துறை குற்றத் தடுப்புப் பிரிவில் கடமையாற்றும் பொலிஸ் உத்தியோகத்தர் வீரசுதன் குடிபோதையில் இருந்தமை உறுதி செய்யப்பட்ட பின்னர், அந்த அதிகாரி கைது செய்யப்பட்டார்.

இத்தாக்குதல் சம்பவத்தில் ஈடுபட்டவர் எனக் கண்டறியப்பட்ட இரண்டாவது அதிகாரி திருச்செல்வம் சம்பவத்தன்று சம்பவ இடத்திலிருந்து வெளியேறினார்.

இவை தொடர்பான மேலதிக விசாரணைகளை உதவி பொலிஸ் அத்தியட்சகர் கங்கசந்துராஜ மேற்கொண்டு இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களையும் நீதிமன்றில் முற்படுத்தியபோது இருவரும் 50 ஆயிரம் ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இருந்தபோதும் இரு பொலிஸாரும் காங்கேசந்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரினால் விசாரணை முடியும் வரை பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர்.

# தேர்தலைக் காலம் தாழ்த்த ஜனாதிபதி ரணிலின் தந்திர மூளை எந்தத் தீர்மானத்தையும் எடுக்கும்!

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி. தெரிவிப்பு




"உள்ளூராட்சிமன்றத் தேர்தல் எவ்வாறு இறுதி கட்டம் வரை சென்று நடத்தப்படாமல் கைவிடப்பட்டதோ, அதே போன்று நிலைமை ஜனாதிபதித் தேர்தலுக்கும் ஏற்படும் என்று சந்தேகிக்கின்றோம். காரணம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தந்திர மூளை தேர்தலை காலம் தாழ்த்துவதற்கு எந்தவொரு தீர்மானத்தையும் எடுக்கத் தயங்காது."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டு சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்ட போதிலும், தேர்தல் இடம்பெறவில்லை. அதே போன்று ஜனாதிபதித் தேர்தலிலும் இடம்பெறக் கூடும். ஜனாதிபதித் தேர்தலை காலம் தாழ்த்த முடியுமா என்று ரணில் விக்கிரமசிங்க ஆராய்ந்ததன் காரணமாகவே அவரது கட்சி சகாக்கள் பல்வேறு கருத்துக்களை வெளியிட்டு அனைவரையும் குழப்பி வந்தனர்.

எவ்வாறிருப்பினும் நீதிமன்றம் அந்த அனைத்து முயற்சிகளுக்கும் முற்றுப்புள்ளி வைத்தது. இப்போதும் ரணில் விக்கிரமசிங்க தேர்தலுக்கு பயம். அவர் தேர்தலுக்கு தயாராக இல்லை. ஆனால் எந்தவொரு காரணத்தைக் கூறியும் ஜனாதிபதித் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அவருக்கு சட்டத்தில் இடமில்லை.

மறுபுறம் அவர் நீதிமன்றத்தின் மீது அழுத்தம் பிரயோகிக்கும் ஜனாதிபதியாகவும் இருக்கின்றார். பொலிஸ்மா அதிபர் நியமனம் முறையாக இடம்பெறவில்லை என்பது தற்போது தெரியவந்துள்ளது.

ஆனால் தனது தேவைக்காக அவரையே தொடர்ந்தும் பொலிஸ்மா அதிபராக வைத்திருப்பதே ஜனாதிபதியின் நோக்கமாகும். சி.டி.விக்கிரமரத்னவை 3 சந்தர்ப்பங்களில் பதில் பொலிஸ்மா அதிபராக நியமித்ததை மறந்து விட்டு, தற்போது பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியாது என்று ஜனாதிபதி கூறுகின்றார்.

தேர்தல் அலுவலகத்தைத் திறப்பதற்கு முன்னர் சென்று வரிசையில் காத்திருந்து முதன் முதலாக கட்டுப்பணத்தை செலுத்தி தான் ஒரு வேட்பாளர் என்றும், எனவே தன்னால் பதில் பொலிஸ்மா அதிபரை நியமிக்க முடியாது என்றும் ரணில் தத்ரூபமாகத் தெரிவித்துள்ளார். இதுவே அவரது தந்திரமாகும். நாட்டில் தொடர்ச்சியாக முரண்பாடுகளை ஏற்படுத்தவே ஜனாதிபதி ரணில் முயற்சிக்கின்றார்."– என்றார்.

## நீச்சல் தடாகத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சிறுவனே இவ்வாறு சாவடைந்துள்ளார்.

இதேவேளை, மேற்படி சிறுவனைக் காப்பாற்றுவதற்காக நீச்சல் தடாகத்தில் குதித்தபோது நீரில் மூழ்கிய அவரது 10 வயதுடைய சகோதரர் மொஹமட் மிஹிறான் என்ற சிறுவன் கண்டி தேசிய வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளார்.

கண்டி – குருந்துகொல்ல, வெரெல்லாகமவில் வசிக்கும் மேற்படி இரண்டு சிறுவர்களும் தமது பெற்றோருடன் நேற்றுமுன்தினம் குறித்த ஹோட்டலுக்குச் சென்றுள்ளனர். இந்நிலையில், நேற்றுக் காலை இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் கண்டி தலைமையகப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# கந்தப்பளையில் புனித சூசையப்பரின் திருவிழா

(ஆ.ரமேஸ்)

நுவரெலியா மாநகரின் புனித பூமியில் அமைந்துள்ள புனித பிரான்ஸ் சவேரியார் ஆலயத்தின் கீழ் இயங்கும் கந்தப்பளை புனித சூசையப்பர் ஆலயத்தின் வருடாந்த திருவிழா திருப்பலி பாதுகாத்தல் 17 ஆம் நாளான நேற்று ஞாயிற்றுகிழமை வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

இந்த வருடாந்த திருவிழாவில் ஆலய பங்குதந்தை அருட்தந்தை காமிலஸ் ஜான்ஸ் தலைமையில் நுவரெலியா நம்மாதா உயர்நிலை பாடசாலை பிரதி அதிபர் அருட்தந்தை சேர்மலின் பங்கேற்றலுடன் நுவரெலியா நம்மாதா உயர்நிலை பாடசாலை அதிபர் அருட்தந்தை சிவந்த் ரொட்ரிகோவினால் கூட்டுத்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இதன்போது நூற்றுக்கும் அதிகமான விசுவாசிகள் பங்கேற்றனர். இவ்விழாவில் புனித சூசையப்பரின் திருவுருவ ஊர்வலம் இடம்பெற்று ஆசிர்வாதமும் அன்னதானமும் வழங்கப்பட்டன.













## இரகசியம் பரகசியம்...

மாலை 4 மணிக்கு கொழும்பில் முன்னாள் ஜனாதிபதியும் மொட்டுக் கட்சித் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் கூடவிருக்கின்றனர். அந்தக் கூட்டத்தில்தான் இவ்விடயத்தில் மொட்டின் இறுதி முடிவு எடுக்கப்படவிருக்கின்றது.

இதற்கிடையில் நேற்று மாலை 5 மணி அளவில் கொழும்பு விஜயராமவில் உள்ள மஹிந்த ராஜபக்ஷவின் இல்லத்துக்கு திடீரென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வந்திறங்கினார். ஒரு சில நிமிட நேர இடைவெளியில் மொட்டுக் கட்சியின் முக்கியஸ்தர் பஸில் ராஜபக்ஷவும் அங்கு வந்து சேர்த்தார்.

மூவரும் – மஹிந்த, ரணில், பஸில் ஆகியோர் – மஹிந்தவின் இல்லத்தில் மூடிய அறைக்குள் சுமார் அரை மணி நேரம் மந்திராலோசனையில் ஈடுபட்டனர். அதன்பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் பஸில் ராஜபக்ஷவும் தனித்தனியாகப் புறப்பட்டு சென்றனர்.

ஜனாதிபதித் தேர்தலில் தமக்கு ஆதரவு தரும்படி மொட்டுக் கட்சியின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷவை ஏற்கனவே கடிதம் மூலம் கோரிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க (சிங்களக் கடிதத்தின் போட்டோ பிரதி இணைக்கப்பட்டுள்ளது), நேற்று மாலை நேரில் மஹிந்த ராஜபக்ஷவை அவரது இல்லத்துக்கு நேரடியாகத்


රනිල් වික්‍රමසිංහ

தேடிச் சென்று சந்தித்து, அந்த வேண்டுகோளை முறைப்படி முன் வைத்தார் என்று கூறப்படுகிறது. நேற்றைய சந்திப்பில் என்ன முடிவு எடுக்கப்பட்டது என்பது தெரிய வரவில்லை.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவின் நிலைப்பாடு யாது என்பது மொட்டுக் கட்சியின் இன்றைய அரசியல் குழுக் கூட்டத்தில் முன்வைக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இன்றைய அரசியல் குழுக் கூட்டத்திற்கு முன்பதாக கூட்ட உறுப்பினர்கள் மத்தியில் மொட்டுக் கட்சி தன் சொந்த வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற சாரபட நாமல் ராஜபக்ஷவும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை ஆதரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டில் அமைச்சர்கள் காஞ்சன விஜயசேகர, பிரசன்னர் ரணதுங்க போன்றோரும் மும்முரமாகப் பிரச்சாரம் செய்து வருகின்றனர் என்றும் தெரிகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் நிலைப்பாட்டை மொட்டுக் கட்சி இன்று எடுக்குமானால் கட்சி நடவடிக்கைகள் மற்றும் தேர்தல் பிரசார வேலைகளில் இருந்து நாமல் ராஜபக்ஷ தற்காலிகமாக விலகி, பூர்த்தியாகாமல் நிலுவையில் நிற்கும் தமது மேற்படிப்புக்காக அவர் மேற்கு நாடு ஒன்றுக்குப் புறப்பட்டு விடுவார் என்றும் ராஜபக்ஷ குடும்ப வட்டாரங்களில் பேசப்படுவதாக அறிய வந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் முடிவை மொட்டுக் கட்சி எடுத்தால் சிறுபான்மையினரின் கணிசமான வாக்குகளை ரணில் விக்கிரமசிங்க இழப்பார் என்றும், அந்த வாக்குகள் சஜித் பிரேமதாஸவுக்குச் சாதகமாக மாறும் என்றும் ஒரு கருத்து நிலைப்பாடு வலிமையாக நிலவுவதும் கவனிக்கத்தக்கது.

+ + +

மன்னாரில் அதானி குழுமத்தினால் முன்னெடுக்கப்படவிருக்கும் மின் உற்பத்திக்கான காற்றாலைகள் திட்டத்திற்கு உள்ளூரில் கடும் எதிர்ப்பு இருப்பது தெரிந்ததே.

இப்படி போராடும் மக்களுடன் நேரடியாகவும் பின்னணியிலும் கிறிஸ்தவ திருச்சபை இருப்பதும் எல்லோருக்கும் தெரிந்ததுதான்.

இந்தத் திட்டத்துக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்களில் ஒன்றின் மனுதாரர் மன்னார் மறை மாவட்ட ஆயர்.

அந்தத் திட்டத்துக்கு எதிராக இன்னும் கடுமையான உறுதிப்பாட்டில் மன்னார் வண பிதாக்கள் தெளிவாக உள்ளனர்.

ஆனால் எதிர்ப்பைக் கைவிட்டு, சமரசம் செய்யும் நிலைப்பாட்டுக்கு மன்னார் ஆயர் வந்துவிட்டார் என்றும், இது கிறிஸ்தவ வண. பிதாக்கள் மத்தியிலேயே அதிர்ச்சி நிலையை ஏற்படுத்தி இருப்பதாகவும் அறிய வருகின்றது.

தமது ஆயர் திருப்பணியின் ஓய்வின் அந்தத்தில் இருக்கும் மன்னார் ஆயர் சில வாரங்களிலோ மாதங்களிலோ இந்தப் பதவியிலிருந்து இளைப்பாறிச் செல்லும் ஏதுநிலைகள் தென்படுகின்றன.

அதற்கிடையில், தம்முடன் சேர்ந்து இவ்விடயத்தில் முன்னின்று போராடிய ஏனைய வண. பிதாக்கள், கிறிஸ்தவ மத பீடம், கிறிஸ்தவ மக்கள் மற்றும் ஏனைய மன்னார் மக்களை சத்தம் சந்தடியின்றி கைவிட்டு அவர் ஒதுங்கி கொண்டார் என்ற தகவல் உண்மையா, இல்லையா என்பதை அவரே அந்த மக்களுக்கு நேரடியாகத் தெளிவுபடுத்துவது கட்டாயம் மற்றும் நல்லது என்று கருதுகிறேன்.

## தமிழ் - முஸ்லிம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கறுப்பு ஜூலையின் 41 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

“நினைவேந்தல் நிகழ்வுகள் நம்பிக்கை தருவதாக அமைய வேண்டும். அதைவிடுத்து வெறுமனே ஒப்பாரிகளுடன் மட்டும் முடிவடையக் கூடாது.

1977ஆம்ஆண்டுபிரசாரமேடைகளில் முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத்தலைவர் மறைந்த அஷ்ரப் உரையாற்றும்போது தமிழ் மக்களுக்கு அண்ணன் அமிர்தலிங்கம் தமிழீழம் பெற்றுத் தராவிட்டாலும் தம்பி அஷ்ரப் பெற்றுத் தருவேன் என்று முழங்கினார்.

இதேபோன்று மறைந்த தொண்டமான் சமஷ்டித்தீர்வை எட்டுவதில் ஓர் அங்கமாகச் செயற்பட்டவர் என்ற ரீதியில் வடக்கு – கிழக்கில் வாழும் மலையகத் தமிழ் மக்களையும் ஒன்றிணைத்துச் செயற்படும் போதே எமது இலக்கை உறுதியாகக் கொண்டு செல்ல முடியும்.

அஷ்ரப் மற்றும் அமிர்தலிங்கம் இடையே காணப்பட்ட ஒற்றுமையும் தமிழின உணர்வும் எந்தளவு தூரம் இருவரிடமும் காணப்பட்டது என்பதற்கு வேறு உதாரணங்கள் தேவையில்லை.

தற்போது சிலர் ஒற்றுமை எனக் கூறுகின்றார்கள். தேர்தல் காலங்களில் வருகின்ற ஒற்றுமை பின்னர் பிரிந்து அரசியல் செய்வது. இதுதான் எங்களிடம் காணப்படுகின்ற ஒற்றுமை.

அஷ்ரப், அமிர்தலிங்கம் போன்றவர்களின் ஒற்றுமை தமிழ் – முஸ்லிம் மக்களிடம் மீண்டும் ஏற்படுமானால் சமஷ்டி நோக்கிய பயணம் இலகுவானதாக அமையும்.

தமிழ் மக்களுக்கு சமஷ்டி கட்டமைப்பு வேண்டும் என்று வீரப் பேச்சுக்கள் பேசுவதால் பயனேதும் கிட்டப் போவதில்லை. மூளையை உபயோகித்து எமது அரசியலை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கையில் 75 வீதமானவர்கள் சிங்களவர்கள். மீதமுள்ள 25 வீதமான தமிழ் பேசும் மக்களை ஒன்றிணைத்தால் நாடாளுமன்றத்தில் சுமார் 50 ஆசனங்களையாவது பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், அவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இல்லை. இருந்தால் ஆட்சியைத் தீர்மானிக்கும் சக்தியாக தமிழ் பேசும் மக்கள் காணப்படுவார்கள்.

ஜனாதிபதித் தேர்தலில் நாங்கள் வாக்களிக்காவிட்டால் தெற்கு பலமாக அமைந்து விடும். இரண்டுக்கும் மேற்பட்டவர்கள் ஜனாதிபதி வேட்பாளர்களாகப் போட்டியிடும் சந்தர்ப்பங்களில் எமது வாக்குகள் பேரம் பேசும் சக்தியாக மாறும்.

இந்தப் பேரம் பேசும் சக்தியாக அரசியல் தலைமைகள் சரியான நேரத்தில் முடிவுகளை எடுக்கும்போது எமது மக்களுக்குப் பயன்பெறக்கூடியதாக அமையும்.

ஆகவே, சமஷ்டி தீர்வை நோக்கிய பயணத்தில் அதனை அடைவதற்கு சாம்பலில் இருந்து புறப்படும் பீனிக்ஸ் பறவை போல் நாங்கள் எழ வேண்டும்.” – என்றார்.

## சமஷ்டியை வலியுறுத்தும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் நேற்று நிகழ்வொன்றின்பின்னர்ஊடகவியலாளர்கள்எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

“ஓகஸ்ட் மாதம் 10 ,11 ஆம் திகதிகளில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி தமிழ்ப் பொது வேட்பாளரை ஆதரிப்பதா அல்லது தேர்தல் விஞ்ஞானத்தில் சமஷ்டியை வலியுறுத்தும் வேட்பாளரை ஆதரிப்பதா என்று முடிவு எடுக்கப்படும்.” – என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

விக்னேஸ்வரன் வடக்கு மாகாண சபையையே நடத்த முடியாதவர் என்று சுமந்திரன் குறிப்பிட்டமை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியபோது,

“எமது கட்சியைச் சேர்ந்தவரின் கருத்துக்கு வியாக்கியானம் வழங்குது சரியான விடயம் அல்ல.

எனினும், இன்றைய காலச் சூழல் அனைவரையும் ஒன்றிணைத்துச் செல்ல வேண்டும். அதனை விட்டு ஒற்றுமையைக் குழப்பிப் பேசிக்கொண்டிருந்தால் அடிப்படை அரசியலைக் கொண்டு செல்வதில் பிரச்சினை உள்ளது. மஹிந்த ராஜபக்ஷ, கிழக்கில் பிள்ளையானை நம்பி பொலிஸ் அதிகாரம் கொடுக்கலாமா என்று அன்று கேட்டிருந்தார்.

அதற்காகவே பொலிஸ் அதிகாரம், நிதி அதிகாரம் வழங்குமாறு கோரி வடக்கில்முன்னாள்நீதியரசர்விக்னேஸ்வரனைக் களமிறக்கினோம். எல்லோருடைய விருப்பத்திலேயே அந்தத் தெரிவு இடம்பெற்றது.” – என்றார்.

# அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்வாராயின் ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு



"அரசமைப்பில் உள்ள ஜனாதிபதியின் பொறுப்புகளை தற்போதைய ஜனாதிபதி நிறைவேற்றத் தவறுவாராயின் அவர் பதவி விலக வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மொனராகலை – புத்தல பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"பொலிஸ் மா அதிபரின் பதவி தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினை சந்தமாக சபாநாயகரும் பிரதம நீதியரசரும் கலந்துரையாடியே தீர்வு காண வேண்டும் என ஜனாதிபதி கூறியுள்ளார்.

தாம் ஜனாதிபதி வேட்பாளராக கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளதன் காரணமாக பொலிஸ் மா அதிபரை தம்மால் நியமிக்க முடியாதென ஜனாதிபதி கூறும் கருத்தை ஏற்க முடியாது. அவ்வாறு அரசமைப்பில் குறிப்பிடவில்லை.

அரசமைப்பில் ஜனாதிபதிக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. அந்த அதிகாரங்களை அவர் துஷ்பிரயோகம் செய்வாராயின் ஜனாதிபதி உடனடியாகப் பதவி விலக வேண்டும்."– என்றார்.




# வடக்கு - கிழக்கு இளையோர் மீனவர் கூட்டு யாழில் நேற்று முதல் தடவையாகச் சந்திப்பு

வடகிழக்கு இளையோர் மீனவர் கூட்டு என்ற புதிய ஓர் அமைப்பு யாழில் நேற்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

சிவில் சமூக பொருளாதார அபிவிருத்தி மையத்தின் ஏற்பாட்டில் யாழில் உள்ள அரச சார்பற்ற நிறுவனமொன்றில் இக் கலந்துரையாடல் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் வடக்கு, கிழக்கு சார்ந்த ஏழு மாவட்டங்களில் உள்ள இளம் மீனவர்கள் மற்றும் மீனவ அமைப்புக்களின் பிரதிநிதிகளும் பங்குபற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.






நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சாத்தானின் வேதம்

பொலிஸ்மா அதிபர் நியமனம் தொடர்பில் உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை உதாசீனம் செய்யும் விதத்தில் துள்ளிக் குதித்து, சீறி, எகிறிக் கருத்து வெளியிட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசின் நிலைப்பாடு இப்போது திடீரென காஸ் இறங்கிய சோடாப்புட்டி மாதிரி அடங்கி விட்டது. சீற்ற விளைவுகளின் தாற்பரியம் புரியத் தொடங்கியதும் அவ்விடயத்தில் காற்றுப் போன பலூன் போன்று மென்போக்கோடு விவகாரத்தை அணுகப் புறப்பட்டிருக்கின்றார் ரணில் விக்கிரமசிங்க.

பொலிஸ்மா அதிபர் நியமனப் பிரச்சினை அடுத்த ஒரு வாரத்துக்குள் சுமுகமாகத் தீர்க்கப்படும் என்று நேற்று ஹோமாகம பஸ் நிலையச் சுற்றாடலில் நடைபெற்ற கூட்டத்தில் அவர் கூறியமை அவரின் புதிய நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி இருக்கின்றது.

பொலிஸ்மா அதிபர் நியமனம் சட்ட ரீதியில் செல்லுபடியற்றது என உயர் நீதிமன்றம் அறிவித்து விட்டமையை ஒப்புக் கொள்ளும் ஜனாதிபதி, அதேசமயம் அந்த நியமனம் சட்டரீதியானது என சபாநாயகர் நாடாளுமன்றத்தில் அறிவித்திருக்கின்றமையால் முரண்பட்ட நிலைமை ஏற்பட்டிருப்பதாகக் கவலைப்படுகின்றார்.

அது அவருடைய பிரச்சினை அல்ல. அது நாடாளுமன்றத்துக்கு பொறுப்பானவர் என்று தம்மை கூறிக் கொள்ளும் சபாநாயகரின் பிரச்சினை. அதை ஜனாதிபதி தூக்கி தலையில் போட்டு குழப்ப - குழம்ப - தேவையில்லை.

நாட்டின் ஜனாதிபதி என்ற முறையில் உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதுதான் ஜனாதிபதியின் பொறுப்பு. சபாநாயகரின் கருத்தைத் தோளில் தூக்கிச் சுமப்பதல்ல.

அதேசமயம் பொலிஸ்மா அதிபர் நியமனப் பிரச்சினை தொடர்பாக தாம் சபாநாயகருடன் பேசியிருக்கின்றார் என்றும், சபாநாயகர் சட்டமாஅதிபர் ஊடாக பிரதம நீதியரசருடன் கலந்துரையாடி ஒரு சுமுகத் தீர்வு எட்டப்படும் என்றும் குறிப்பிட்டு, விவகாரத்தை இப்போது அடக்கி வாசிக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இதில் கலந்துரையாடி தீர்வு காண என்ன விடயம் பொதிந்துள்ளது என்பது விளங்கவில்லை.

உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைப்படுத்துவதை தவிர, இவ்விடயத்தில் சட்டமா அதிபருடனும் பிரதம நீதியரசருடனும் பேசி புதிதாக வேறு என்ன சுமுகத் தீர்வு காண முடியும் என்பதும் தெளிவில்லை.

உயர்நீதிமன்றத்தின் ஆயம் இவ்விடயத்தில் தெளிவான - திட்டவட்டமான - விளக்கமான - உத்தரவு ஒன்றை வழங்கி இருக்கையில், சபாநாயகரும் ஜனாதிபதியும் தத்தமது பாட்டில் கருத்துக்களை வெளியிட்டு குழப்பி அடித்து விட்டு, அது குறித்து பிரதம நீதியரசருடன் என்ன பேச இருக்கின்றது என்பதுசட்டரீதியாகப்புரியாதவிடயமாக உள்ளது.

உயர்நீதிமன்ற ஆயம் தெளிவான ஓர் உத்தரவை வழங்கி இருக்கையில், அதற்கு மாறான ஒன்றை நடைமுறைப்படுத்த அல்லது தீர்வாக முன்னெடுக்க எந்தத் தரப்புடனாவது பிரதம நீதியரசர் தமது பதவி நிலை கோதாவில் பேச்சு கூட நடத்த முடியுமா என்பது கேள்விக் குறிதான்.

ஆகவே நீதிமன்றம் கொடுத்த உத்தரவை நடைமுறைப்படுத்துவதன் மூலம் விவகாரத்தை சுமுகமாக தீர்ப்பதைத் தவிர இதில் வேறு வழி ஒன்றும் இல்லை என்பது தெளிவானது.

இதனிடையே இந்த அறிவிப்பில் தம்மை சுத்த ஜனநாயகவாதியாகக் காட்ட பெரும் நடிப்பு வேடமிடுகின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. தேர்தல் வாக்களிப்பு மக்களின்அடிப்படை உரிமை, இறைமை என்றெல்லாம் பிரபலாபிக்கும் அவர், அதை எப்படியும் காப்பேன் என்றும் ருத்திராட்சப் பூனையாக உபதேசம் செய்கின்றார்.

வாக்களிப்பு மக்கள் இறைமை என்றால், ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் நடந்திருக்க வேண்டிய மக்களின் உரிமையான உள்ளாட்சித் தேர்தல் வாக்களிப்புக்கு ஆப்படித்த பிரகிருதி யார்? இப்போது மக்களின் வாக்களிப்பு உரிமையைக் காப்பேன் என ரணில் கூறுவது யாரோ வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

# தமிழகத்தை வஞ்சிக்கும் பட்ஜெட்டை கண்டித்து இடதுசாரிக் கட்சிகளால் மறியல் போராட்டம்

தமிழகத்தை வஞ்சிக்கும் பட்ஜெட்டை கண்டித்து இடதுசாரிக் கட்சிகள் எதிர்வரும் 1 ஆம் திகதி மறியல் போராட்டம் நடத்த தீர்மானித்துள்ளன.

மதுரை, மகபூப்பாளையத்தில் உள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டக்குழு அலுவலகத்தில் நேற்று மதுரை எம்பி சு.வெங்கடேசன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் தெரிவிக்கையில்,

"இந்திய மக்களுக்கு, கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராக மத்திய பா.ஜ.க. அரசு பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது. இதனை கண்டித்து இடதுசாரிக்கட்சிகள் சார்பில் மாபெரும் போராட்டம் ஓகஸ்ட் 1 ஆம் திகதி நடைபெறும். நாடாளுமன்றத் தேர்தலுக்குப்பின் முதன்முறையாக நாடாளுமன்றத்தில் மத்திய அரசு பட்ஜெட் தாக்கல் செய்துள்ளது.

இந்த பட்ஜெட் நாடு முழுவதும் எதிர்ப்பை, கோபத்தை உருவாக்கியுள்ளது. இது நாட்டுக்கான பட்ஜெட்டாக இல்லாமல், நாற்காலிக்கான பட்ஜெட்டாக பா.ஜ.க. அரசு தாக்கல் செய்துள்ளது. ஆந்திரா, பிஹாருக்கான குறிப்பிட்ட சிறப்புத் திட்டங்களை அறிவித்த இந்த பட்ஜெட், நாட்டின் வேறு எந்த மாநிலத்திற்கும் சிறப்பு திட்டங்களை அறிவிக்கவில்லை. தமிழ்நாட்டிற்கு எந்த திட்டங்களும் அறிவிக்கவில்லை.

வஞ்சிக்கப்பட்ட மாநிலமாக தமிழ்நாடு உள்ளது. இந்தியாவில் 10 பெருநகரங்களை கொண்ட தமிழகத்திற்கு கடந்த 10 ஆண்டுகளில் மற்ற மாநிலங்களுக்கு ஒதுக்கிய நிதியை விடவும் தமிழகத்தி ஒதுக்கிய நிதி மிகமிகக் குறைவு. அதே நிலை இந்த பட்ஜெட்டிலும் தொடர்கிறது. இது தமிழகத்தின் வளர்ச்சியில் மிகப்பெரிய பாதிப்பை உருவாக்கும். மதுரை மெட்ரோ திட்டம், கோவை மெட்ரோ திட்டத்திற்கு எதுவும் இல்லை. பா.ஜ.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அரசுக்கு வரி வருமானத்தில் முதலிடத்தில் இருந்தது கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு விதிக்கும் வரி. அதற்கு அடுத்த இடத்தில் மறைமுக வரி, இதற்கு அடுத்து தனிநபர் வருமான வரி இருந்தது. ஆனால் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பிறகு இந்த




நிலைமை தலைகீழாக மாறியுள்ளது.

கார்ப்பரேட்கள் செலுத்தும் வரி 3 ஆவது இடத்திற்கு சென்றுவிட்டது. ஜி.எஸ்.டி. வரி முதலிடம், தனிநபர் வரி இரண்டாமிடத்தில் உள்ளது. எனவே ஒட்டுமொத்தமாக இந்த பட்ஜெட் நாட்டுக்கான பட்ஜெட்டாக இல்லாமல், பா.ஜ.க. அரசின் நாற்காலிக்கான பட்ஜெட்டாக உள்ளது. மாநிலங்களை பழிவாங்குகிற சந்தர்ப்பவாத பட்ஜெட்டாக இருக்கிறது.

இந்தியாவின் தொழில், விவசாயம், சிறுகுறு, நடுத்தர தொழில்களை நசுக்குகிற அநீதி இழைக்கிற பட்ஜெட்டாக இருக்கிறது. நாளையுடன் (இன்று) பட்ஜெட் மீதான விவாதம் முடிவடைகிறது. நாளை விவாதத்தின் மீது நிதியமைச்சர் பதிலளிக்கிறார். இதில் மிகப்பெரிய துரதிர்ஷ்டம் என்னவென்றால், 2014 ஆம் ஆண்டு வரை ரயில்வே பட்ஜெட் இருந்தது. தமிழ்நாட்டுக்கும் எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கும் மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

அநீதியைக் கண்டித்துத்தான் இடதுசாரிக் கட்சிகள், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவை ஓகஸ்ட் 1 இல் மறியல் போராட்டத்தை நடத்துகிறோம். மதுரை ரயில் நிலையம், ஒத்தக்கடை, திருமங்கலம், உசிலம்பட்டி ஆகிய இடங்களில் மறியல் போராட்டம் நடத்தப்படுகிறது."– என்றார்.

# பழமையான பொருள்களை மீட்டெடுத்தல் இந்தியா – அமெரிக்கா இடையே ஒப்பந்தம்






பழமையான பொருள்களை மீட்டெடுப்பது தொடர்பாக இந்தியா, அமெரிக்கா இடையேயான கலாச்சார சொத்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவில் நடைபெற்று வரும், 46 ஆவது யுனெஸ்கோ உலக பாரம்பரிய குழு கூட்டத்திலேயே இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

இந்தியாவிலிருந்து பழமையான பொருள்கள், கலைச் சிற்பங்கள், கலைப் பொக்கிஷங்களை அமெரிக்காவுக்குக் கடத்திச் செல்வதைத் தடுக்க இந்த ஒப்பந்தம் வழிவகை செய்யும் என தெரிவிக்கப்படுகின்றது.

மத்திய கலாச்சாரம், சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் முன்னிலையில் இந்த ஒப்பந்தத்தில் மத்திய அரசின் கலாச்சாரத்துறை செயலர் கோவிந்த் மோகன், இந்தியாவுக்கான அமெரிக்க தூதர் எரிக் கார்செட்டி ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

கலாச்சாரப் பொருள்கள், பொக்கிஷங்கள், சொத்துகளை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டுக்கு சட்டவிரோதமாக கடத்துவது நீண்ட நாள்களாக உள்ளக பிரச்சினையாகப் பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், கைச்சாத்திடப்பட்டுள்ள இந்த ஒப்பந்தத்தின் மூலம் இதுபோன்ற கலைப் பொக்கிஷங்கள் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்குக் கடத்தப்படுவது தடுக்கப்படும் என தெரிவிக்கப்படுகின்றது.

சுதந்திரத்துக்கு முன்னதாகவும், அதற்குப் பின்பும் இந்தியாவிலிருந்து பல்வேறு விலைமதிக்க முடியாத பழங்காலப் பொருள்கள், கலைச் சிற்பங்கள் வெளிநாடுகளுக்குக் கடத்திச் செல்லப்பட்டன.

இந்த அரிய பொக்கிஷங்கள் உலகம் முழுவதிலும் உள்ள பல்வேறு நாடுகளின் அருங்காட்சியகங்கள், நிறுவனங்கள், தனிநபர்களின் பாதுகாப்பில் உள்ளன என குறிப்பிடப்படுகின்றது.

1970 இல் நடந்த யுனெஸ்கோ மாநாட்டில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின்படி, ஒரு நாட்டிலிருந்து பழங்கால பொருள்கள், பொக்கிஷங்களை கடத்திச் செல்வது தடுக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, இந்தியாவிலிருந்து கடத்திச் செல்லப்பட்ட பொக்கிஷங்களில் 358 கலைப்பொருள்கள் திரும்ப இந்தியாவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதில் 345 கலைப்பொருள்கள் 2014 இற்குப் பின்னர் இந்தியாவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளன என இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இவற்றில் பெரும்பாலானவை அமெரிக்காவிலிருந்து மீட்டு இந்தியாவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



# சீனாவில் ஏற்பட்ட மண்சரிவில் 12 பேர் பலி, 18 பேர் காயம்!

சீனாவின் மத்திய பகுதியில் ஏற்பட்ட மண்சரிவில் 12 பேர் உயிரிழந்தனர்.

அத்துடன் மண்சரிவில் சிக்குண்டு 18 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இதுவரையில் 6 பேர் மீட்கப்பட்டுள்ளனர் என குறிப்பிடப்பட்டுள்ளது.

தற்போது 240 இற்கும் மேற்பட்ட மீட்புப் படையினர் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

சீனாவில் தற்போது நிலவும் சீரற்ற காலநிலையினால், அங்கு தொடர்ந்தும் வெள்ளம் ஏற்படுவதற்கான வாய்ப்பு காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.







# பிரித்தானிய, அமெரிக்க வணிக கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும்; ஹமாஸ் எச்சரிக்கை

இனி வரும் காலங்களில், பிரித்தானிய மற்றும் அமெரிக்க வணிக கப்பல்கள் மீதும் தாக்குதல் நடத்தப்படும் என ஹமாஸ் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஏமன் மீது, அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப் படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலையடுத்தே இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதனால் அங்கு போர் பதற்றம் அதிகரித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப்படையினர் நடத்திய ஏவுகணை தாக்குதலில், ஏமனின் ஹுடைடா விமான நிலையம் மற்றும் கமரன் தீவு ஆகியவை கடுமையாக சேதமடைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த தாக்குதலில் ஏற்பட்ட உயிரிழப்புக்கள் குறித்து இதுவரை எவ்வித விபரங்களும் வெளியாகவில்லை. எனினும், இந்த தாக்குதல் காரணமாக அங்கு விமான போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இஸ்ரேல்-காசா போரில் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஏமனில் உள்ள ஹவுதி கிளர்ச்சியாளர்கள் செயற்பட்டு வருகின்றனர்.

அதன்படி, செங்கடல் வழியாக பயணிக்கும் இஸ்ரேல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கப்பல்கள் மீது, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் அடிக்கடி தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இதில் அமெரிக்கா, பிரித்தானியா உள்ளிட்ட ஏனைய நாடுகளின் வணிக கப்பல்களும் சேதம் அடைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, செங்கடல் வழியாக பயணிக்கும் வணிக கப்பல்களை பாதுகாக்க அமெரிக்கா தலைமையில் ஒரு கூட்டுப்படை உருவாக்கப்பட்டுள்ளது.

இந்த கூட்டுப்படையில் பிரித்தானியா, ஜேர்மனி உள்ளிட்ட 20 க்கும் மேற்பட்ட நாடுகள் இணைந்துள்ளன. மேற்படி கூட்டுப்படையினர் செங்கடல் பகுதியில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருவதுடன், ஹவுதி கிளர்ச்சியாளர்களின் தாக்குதல்களுக்கு உடனடியாக பதிலடி தாக்குதலும் நடத்தி வருகின்றனர்.

இதற்கிடையே, ஹவுதி கிளர்ச்சியாளர்கள், இஸ்ரேலின் டெல் அவிவ் நகரை குறிவைத்து அண்மையில் நடத்திய ட்ரோன் தாக்குதலில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர் என தெரிவிக்கப்பட்டது.

இதனையடுத்து, ஹவுதி கிளர்ச்சியாளர்கள் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தவுள்ளதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு அறிவித்திருந்தார்.

இந்தநிலையிலேயே, இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பதிலடியாக அமெரிக்கா மற்றும் பிரித்தானிய கூட்டுப்படையினர் ஏமன் மீது ஏவுகணை தாக்குதல் நடத்தியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

# காசா மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 66 பேர் உயிரிழப்பு





காசா மீதான இஸ்ரேலின் தாக்குதலில் கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 66 பேர் உயிரிழந்துள்ளனர்.

அத்துடன் குறித்த தாக்குதலில் 241 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் குறிப்பிடுகின்றன.

லெபனானில் உள்ள நகரங்கள் மீதும் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மேற்படி தாக்குதலில் 12 சிறுவர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# 2024 இல் சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகளவு அதிகரிப்பு!

## அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தகவல்

“கடந்த இரண்டு வருடங்களுடன் ஒப்பிடுகையில், 2024 ஆம் ஆண்டில், வனவளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தந்த உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.”

– இவ்வாறு வனஜீவராசிகள், வன வளங்கள் மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற இரண்டு வருட முன்னேற்றம் தொடர்பான செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், 2024 இல், வனவளத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ள சுற்றுலா தலங்களுக்கு வரும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. அதன்படி, 2022ஆம் ஆண்டு வன வளத் திணைக்களத்தின் கட்டுப்பாட்டில் உள்ள சுற்றுலாத் தலங்களுக்கு வருகை தந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 289,405 ஆகவும், 2023ஆம் ஆண்டில் 444,053 ஆகவும் பதிவாகியுள்ளது. 2024ஆம் ஆண்டின் முதல் 6 மாதங்களில் மட்டும் சுமார் 364 521 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர்.

இவற்றில், 2022 ஆம் ஆண்டில் அந்த இடங்களுக்குச் சென்ற மொத்த சுற்றுலாப் பயணிகளில் 19.8 வீதம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளாவர். 2023 ஆம் ஆண்டில், 27. வீதம் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை தந்ததோடு 2024 இல் 40 வீதம் வீதமானோர் வருகை தந்துள்ளனர்.

இந்த நாட்டிற்கு அந்நியச் செலாவணியை ஈட்டிப் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் நோக்கில், சுற்றுச்சூழல் சுற்றுலாத் துறையை மேம்படுத்துவது தொடர்பான ஒழுங்கு விதிகளை தயாரித்து, நாடாளுமன்றத்தின் அனுமதியைப் பெற்று, அதற்கான சட்டத் திருத்தங்களைச் தயாரித்து வருகிறோம். அதன்படி, 2023 ஆம் ஆண்டில், 2500 ஹெக்டெயார் நிலப்பரப்பு கொண்ட கல்லோயா சுற்றுச்சூழல் பூங்கா புதிய சுற்றுலாத்தளமாக பொதுமக்கள் பாவனைக்கு திறக்கப்பட்டது. மேலும், தற்போது சுற்றுலா பயணிகளை கவர்ந்து வரும் சிங்கராஜ வனப்பகுதியில் உள்ள குடவா தொரண எல்ல நுழைவு வாயிலில் சுற்றுலா பயணிகளுக்காக தகவல் மையம் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது.

மேலும், 2024 ஆம் ஆண்டில், நக்கிள்ஸ் சுற்றுலா வனப்பகுதியின் இழுக்கும்புர பகுதியில் மாணிகல வன விடுதி கட்டப்பட்டு சுற்றுலாப் பயணிகளுக்காக திறக்கப்பட்டுள்ளது. கண்டி உடவத்தகெலேயில் சுற்றுலாப் பயணிகளுக்காக சைக்கிள் பாதை திறக்கப்பட்டது. பண்டாரவளை எல்ல வன இல்லம், புத்தளம் மாவட்டத்தில் உள்ள கல்விச் சுற்றுச்சூழல் பூங்கா போன்றவற்றையும் இவ்வருடம் சுற்றுலாப் பயணிகளுக்காக திறந்து வைக்க முடிந்தது.

மேலும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் எதிர்கொள்ளும் மலசலகூட வசதி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்கும் வகையில், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வரும் சிங்கராஜா, கன்னெலிய, /ஹருலு, நக்கிள்ஸ், உடவத்தகெலே ஆகிய இடங்களில் வெளிநாட்டு பயணச்சீட்டு வைத்திருப்பவர்களுக்கு மட்டும் தனியான மலசல கூட வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த சுற்றுலா தலத்தை பார்வையிட ஒன்லைன் முறை மூலம் டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதியும் தற்போது நடைமுறையில் உள்ளது.



மேலும், தற்போது 29 வீதமாக உள்ள வனவள பரப்பை 2030 ஆம் ஆண்டுக்குள் 32 வீதமாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதன்படி, எங்களின் கீழ் வர்த்தமானியில் வெளியிடப்படாத சுமார் 144 000 ஹெக்டயார்களை புதிதாக காடுகளாக உள்வாங்க எதிர்பார்க்கிறோம்.

மேலும், காடுகளுக்கு அப்பால் மரங்களை நடுவதன் மூலம் மக்களுக்கு பலன்களை வழங்கும் நோக்கில், வன மீள்நடுகை மற்றும் விருட்சப் பாதுகாப்புச் சட்டத்தை தயாரிப்பதற்கு அமைச்சரவை அனுமதி கிடைத்துள்ளதோடு தற்பொழுது சட்ட வரைவு தயாரிக்கப்படுகிறது.

மேலும், காடுகளை பாதுகாப்பதற்காக, இந்த ஆண்டு நவீன தொழில்நுட்பத்தில் ஆளில்லா விமானங்களை பயன்படுத்தும் பணி தொடங்கப்பட்டுள்ளது. வடகிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் பாதுகாக்கப்பட்ட பகுதிகளாக அறிவிக்காத காடுகளைப் பாதுகாக்க, ஒருங்கிணைந்த அணுகுமுறைகளை கையாண்டு வருகிறோம். வன எல்லைகள் அடையாளம் காணப்பட்டு, நிரந்தர வன அமைப்பை நிறுவுவதற்காக அவற்றின் எல்லைகளைச் சுற்றி எல்லைத் தூண்கள் நடப்படுகின்றன.

மேலும் சதுப்புநில சுற்றுச்சூழல் கட்டமைப்புகளை மீட்டெடுப்பதில் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். அதற்காக நாங்கள் எடுத்த நடவடிக்கைகள் சர்வதேச ரீதியிலும் பாராட்டைப் பெற்றுள்ளன. கடந்த 02 ஆண்டுகளில், 326 ஹெக்டெயார் சதுப்புநிலங்கள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இதற்காக ஐக்கிய நாடுகளின் விசேட விருதை இலங்கை வென்றது.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் எமது அமைச்சின் கீழுள்ள தேசிய மிருகக்காட்சிசாலை திணைக்களமும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது . சில வருடங்களில் வருமானம் வீழ்ச்சியடைந்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் 1089.97 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டப்பட்டுள்ளது. 2023 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் 436.71 மில்லியன் ரூபாவாக இருந்த வருமானம் 2024 ஆம் ஆண்டு ஜுன் மாத இறுதியில் 728.60 மில்லியன் ரூபவாக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 6. வீதம் முன்னேற்றம் என்றே கூற வேண்டும்.

அத்துடன், 2024 ஆம் ஆண்டு இதுவரை அரச மரக் கூட்டுத்தாபனம் 2000 மில்லியன் ரூபா வருமானம் ஈட்டியுள்ளது. இந்த வருட இறுதியில் அதிக இலாபத்தைப் பதிவு செய்யும் என்பது உறுதி. ”– என்றார்.



# பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1700 ரூபாவை வென்றெடுக்க ஹட்டனில் ஆர்ப்பாட்டம்

(க.கிஷாந்தன்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் சம்பளமாக 1700 ரூபா உடன் வழங்குமாறு கோரி பெருந்தோட்டக் கம்பனிகளுக்கும், அரசுக்கும் அழுத்தம் கொடுத்து தமிழ் முற்போக்குக் கூட்டணியினர் ஹட்டனில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மலையகப் பெருந்தோட்ட மக்களுக்கான காணி உரிமை, சம்பள உரிமை, வீட்டு உரிமை என்பன இதன்போது வலியுறுத்தப்பட்டதுடன், தோட்டத் தொழிலாளர்கள் சம்பளம் தொடர்பில் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மீளப் பெறப்பட்டமை தொடர்பிலும் கடும் எதிர்ப்பை ஆர்ப்பாட்டக்காரர்கள் வெளியிட்டனர்.

இந்தப் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் கறுப்பு நிற ஆடைகளை அணிந்திருந்ததுடன், ஹட்டனில் உள்ள சில கடைகளிலும், ஓட்டோக்களிலும் கறுப்புக் கொடி ஏற்றி ஆர்ப்பாட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

ஹட்டன் நகர புட்சிட்டி பகுதியில் இருந்து போராட்டத்தை ஆரம்பித்து ஹட்டன் பிரதான நகர் வழியாக பேரணி மணிக்கூட்டுக் கோபுரத்தைச் சென்றடைந்தது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலகத் தடுப்புப் பிரிவும், நீர்த்தாரைப் பிரயோக வாகனமும், ஹட்டன் பொலிஸ் நிலையத்துக்கு வரவழைக்கப்பட்டதுடன், ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அனைத்து பொலிஸ் நிலையங்களில் இருந்தும் பெருந்தொகையான பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுப்படுத்தப்பட்டிருந்தனர்.

இந்தப் போராட்டம் காரணமாக ஹட்டன் நகரில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டிருந்தமை குறிப்பிடதக்கது.



# வெளிநாட்டுக் கைத்துப்பாக்கியுடன் குடும்பஸ்தர் கைது!

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியை வைத்திருந்த குற்றச்சாட்டில் குடும்பஸ்தர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம், இபலோகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல்லேகம பகுதியில் வைத்து இந்தக் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் பல்லேகம பிரதேசத்தில் மரதன்கடவல பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மரதன்கடவல பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இப்போது நாம் எடுக்க வேண்டிய ஒரே ஆயுதம் பொருளாதாரம்தான்!

## யாழில் கறுப்பு ஜூலை நினைவு கூரலில் சாணக்கியன் எடுத்துரைப்பு



(ந.லோகதயாளன்)

இன்று எமது கையிலே ஆயுதம் இல்லை. இதற்காக தமிழ் மக்கள் பொருளாதாரத்தை ஆயுதமாக எடுக்க வேண்டும்.

–இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

கறுப்பு ஜூலை நிகழ்வின் 41ஆம் ஆண்டு நினைவு கூரல் யாழில் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

மட்டக்களப்பு மாவட்டத்திலே வழமையாக கறுப்பு ஜூலை நினைவேந்தல் அனுஷ்டிக்கப்படும் இருப்பினும் நான் இம்முறை யாழில் பங்கேற்கின்றேன். கறுப்பு ஜூலை நிகழ்வுகள் 1983ஆம் ஆண்டு இடம்பெற்றன.

நானோ 1990 ஆம் ஆண்டுதான் பிறந்தேன். பிறக்க முதல் இடம்பெற்ற வரலாற்றை அறிந்துள்ளோம். நாட்டின் அரசினால் வடக்கு, கிழக்கு உள்பட பல வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன.

அது இன்றும் தொடர்கின்றது. அது பல வடிவில் நடக்கின்றது. இதில் அதிக விடயங்களை நாம் தடுத்தும் உள்ளோம். குறிப்பாக மட்டக்களப்பில் தேர்தலிற்கு பின்பு மகாவலி அதிகார சபையால் 10 ஆயிரம் பேர் குடியேற்றம், வனவளம் மற்றும் சிவில் பாதுகாப்பு குழு ஊடான நில அபகரிப்பு உள்ளிட்ட விடயங்களை தடுத்தோம். எதுவுமே செய்யவில்லை எனக் கூறமுடியாது.

இதேநேரம் இந்த நாட்டில் கடற்றொழில் அமைச்சராக தமிழ் அமைச்சர் இருப்பதனால் தமிழ் மீனவர்களிற்குப் பிரச்சினை இல்லை என சிங்கள மீனவர்கள் நினைக்கின்றனர். உண்மையில் தமிழ் அமைச்சர் இருப்பதே தமிழ் மீனவர்களிற்கான பெரிய பிரச்சினை.

இந்த நாட்டில் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு முடியும் வரை தேர்தல் நடக்குமா என்றால் அது எனக்குச் சந்தேகம்தான்.

இந்த ஜனாதிபதி வந்த பின்பு காணி விடுவோம் என்பர். ஆனாலும் காணி பிடிக்கின்றனர்.

இராணுவ முகாமை எடுப்போம் என்பர். ஆனால் முகாமிற்கு காணி எடுப்பர். அவ்வாறானால் என்னதான் நடக்கின்றது?

நாட்டிலே ஜனாதிபதித் தேர்தல் இடம்பெற்றால் 2005 இற்குப் பின்பு ராஜபக்ஷக்கள் இல்லாத ஒரு தேர்தலாக இம்முறை இடம்பெறும் தேர்தலாக அமையும்.

இன்று எமது கையிலே ஆயுதம் இல்லை. இதற்காக தமிழ் மக்கள் பொருளாதாரத்தை ஆயுதமாக எடுக்க வேண்டும். – என்றார்.

# எம் விவசாயிகளையும், உற்பத்தியாளர்களையும் சீனாவின் உதவியினால் ஊக்குவித்திருக்கலாம்!

## விசனத்துடன் சுட்டுகின்றார் கடற்றொழிலாளர் பிரதிநிதி அன்னராசா

(ந.லோகதயாளன்)

சீனாவின் 500 மில்லியன் ரூபா உதவி கிட்டியது எனக் கத்துபவர்கள் அந்த 500 மில்லியனையும் எமது நாட்டிற்குள் பணமாக கொண்டு வந்து, எமது விவசாயிகள், எமது உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து இங்கே அரசி கொள்வனவு செய்து வழங்கியிருந்தால் அனைவரும் மகிழ்ந்திருப்போம் என கடற்றொழிலாளர் அமைப்பைச் சேர்ந்த அ.அன்னராசா தெரிவித்தார்.

கறுப்பு ஜூலை நிகழ்வின் 41 ஆவது ஆண்டு நினைவு கூரல் யாழில் உள்ள தந்தை செல்வா கலையரங்கில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில் கூறியவை வருமாறு:–

நீதி அமைச்சர் இந்த நாட்டில் இடம்பெற்ற கறுப்பு ஜூலைக்கு வருத்தம் தெரிவிக்கின்றார். வருத்தம் வேண்டாம். நீதி அமைச்சரே! எமக்கு நீதிதான் வேண்டும்.



1983 இல் நடந்த சம்பவங்கள் உள்ளன. இவற்றிற்கும் இந்த நாட்டில் இன்றுவரை நீதி இல்லை. இதற்கு அப்பால் 2009 இல் உயிரோடு கையில் கொடுத்தவர்களிற்கும் நீதி இல்லை. அழிக்கப்பட்டவற்றுக்கும் நீதி இல்லை அவ்வாறானால் இவற்றிற்கு என்னதான் தீர்வு?

இன்று நாம் சத்தம் இன்றி, யுத்தம் இன்று அழிக்கப்படுகின்றோம். வாழ்விற்கும், போரிற்கும் பெரும் பங்காற்றிய கடல் வளம் இன்று திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது.

கடலில் அந்நியச் செலாவணி என்னும் மாயை உருவாக்கி அபகரிக்கப்படுகின்றது.

சினாவின் உதவியை 500 மில்லியன் ரூபா எனக் கத்துபவர்கள் அந்த 500 மில்லியனையும் பணமாக கொண்டு வந்து எமது விவசாயிகள், எமது உற்பத்தியாளர்களையும் ஊக்குவித்து இங்கே அரசி கொள்வனவு செய்து வழங்கியிருந்தால் மகிழ்ந்திருப்போம்.

அதை விடுத்து அந்நியச் செலாவணி என வெளிநாடுகளிற்காகவும் பல் தேசியக் கம்பனிகளிற்காகவும் எமது கடல் வளம் திட்டமிட்டு, சத்தமின்றி, யுத்தமின்றி அழிக்கப்படுகின்றது. இதன் மூலம் அரசும் எமது இருப்பை கேள்விக் குறியாக்கும்போது எம்மவர்களும் அதற்கு உடந்தையாக உள்ளனர்.

இலங்கையிலேயே சட்டவிரோதமான தொழில்கள் அதிகமாக செய்யப்படும் மாகாணமாக வடக்கு கிழக்கு மாகாணமே உள்ளது. – என்றார்.




# ஆசியக் கிண்ணத்தை சுவீகரித்தது இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி

## ஜனாதிபதி ரணில் வாழ்த்து தெரிவித்தார்





மகளிருக்கான ஆசியக் கிண்ண இருபதுக்கு 20 கிரிக்கெட் தொடரின் இறுதிப்போட்டியில் இலங்கை மகளிர் அணி 8 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது.

தம்புள்ளையில் இடம்பெற்ற இந்த போட்டியில் இந்திய மற்றும் இலங்கை மகளிர் அணிகள் மோதின.

போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இந்திய மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய மகளிர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 165 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தில் இந்திய மகளிர் அணியின் சார்பில் ஸ்மிருதி மந்தனா 60 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தார்.

இதற்கமைய 166 எனும் வெற்றி இலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய இலங்கை மகளிர் அணி 18.3 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றி இலக்கை கடந்தது.

துடுப்பாட்டத்தில் இலங்கை மகளிர் அணியின் சார்பில் ஹர்ஷிதா சமரவிக்ரம 69 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார்.

இந்தநிலையில் இந்திய மகளிர் அணியை வீழ்த்தி இலங்கை மகளிர் அணி ஆசியக் கிண்ணத்தைத் தன்வசப்படுத்தியுள்ளது.

இதேவேளை, ஆசிய கிண்ணத்தை வென்ற சமரி அதபத்து உள்ளிட்ட இலங்கை மகளிர் கிரிக்கெட் அணிக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

“உங்களுடைய தோல்வியற்ற பயணத்திற்கு உங்கள் திறமை, அர்ப்பணிப்பு மற்றும் கூட்டு செயற்பாடு என்பன சான்றாக அமைகிறது. நீங்கள் எமது நாட்டை கௌரவப்படுத்தியுள்ளீர்கள்.” – என்றார்.



டாக்டர்
முரளி வல்லிபுரநாதன்
[சமுதாய மருத்துவ நிபுணர்]

# மருத்துவ மாபியா!

இன்று யாழ்ப்பாணத்திலும் தமிழ் சமூக ஊடகங்களிலும் உச்சரிக்கப்படும் ஒரு பொதுவான பதம் "மருத்துவ மாபியா". இந்தப் பதம் தமிழ் ஊடகங்களில் பொருத்தமான சந்தர்ப்பங்களில் உபயோகப்படுத்தப்படுகிறதா அல்லது மருத்துவத்துறை சார்ந்த அனைத்து முறைக்கேடுகளுக்கும் எழுந்தமானமாக உபயோகிக்கப்படுத்தப்படுகிறதா மற்றும் இதன் பிண்ணனியில் உள்ளவர்களின் நோக்கம் என்ன என்பதை ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## மாபியா

முதலில் மாபியா என்றால் என்ன என்பதையும் அதன் பின் மருத்துவ மாபியா என்றால் என்ன என்பதையும் பார்ப்போம்.

மாபியா என்பது ஆரம்பத்தில் இத்தாலியில் இயங்கிய ஒரு இரக்கமற்ற குற்ற செயல்கள் மூலமாக பணம் சம்பாதிக்கும் அமைப்பை குறிக்கும். எதிரிகளை அல்லது தமது செயல்பாடுகளை தடுப்பவர்களை உடனடியாக கொலை செய்வதனாலும் அவர்கள் உயர் அதிகாரிகளில் இருந்து கீழ் மட்டம் வரை ஒரு வலையமைப்பாக இயங்குவதால் மாபியா என்ற வார்த்தையை கேட்டாலே பலர் பயந்து நடுங்குவார்கள். பிற்காலத்தில் மாபியா வலையமைப்புகள் பல நாடுகளில் பரவி அந்த நாடுகளின் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணும் அமைப்புகளுக்கு சவாலாக இருந்து வருகின்றன.

## மருத்துவ மாபியா

இப்போது மருத்துவ மாபியா என்னும் பதம் மேலை நாடுகளில் உபயோகிக்கப்படும் சந்தர்ப்பங்களை எடுத்து நோக்குவோம். மருத்துவ மாபியா, மாபியா வலையமைப்பை சேராத – ஆனால் மாபியாவின் குணங்கள் அதாவது பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய மக்கள் மற்றும் நோயாளிகளின் உயிரை பற்றி சிறிதும் கவலைப்படாத ஒரு வலையமைப்பைக் குறிக்கும்.

பொதுவாக இந்த வலையமைப்பில் மூன்று தரப்புகள் சம்பந்தப்பட்டு இருக்கும்.

முதலாவதாக மருத்துவத்துறை சார் சங்கங்கள் அல்லது மருத்துவ சேவையாளர்கள்.

இரண்டாவதாக மருந்து மற்றும் ஏனைய சுகாதார சேவை வழங்கலுடன் தொடர்புடைய மருந்துகள், அன்றாட பாவனைப் பொருள்கள் மற்றும் உபகரணங்கள் முதலியனவற்றை விற்கும் நிறுவனங்கள். மூன்றாவதாக மருந்து மற்றும் சுகாதார சேவை வழங்கலுடன் தொடர்புடைய பொருள்களின் தரத்தையும் பாதுகாப்பையும் நிர்ணயிக்கும் நிறுவனங்கள். இந்த முத்தரப்பும் இணைந்து தங்களுடைய சுயநலன்களுக்காகவும் இலாபத்துக்காகவும் நோயாளிகளையும் மக்களையும் சுரண்டுவதையே பொதுவாக "மருத்துவ மாபியா" என்று அழைக்கிறார்கள்.

## இலங்கையில் மருத்துவ மாபியா

மனித இமியுனோ குளோபுலின் குப்பிகளை இறக்குமதி செய்து வழங்கியதாக உரிமை கோரிய வழங்குனர்கள், மருந்துகளது தராதரத்தினைப் பரிசோதித்துச் சான்றளிக்கும் நிறுவகத்தின் உயரதிகாரி, கொள்வனவில் ஈடுபட்ட சுகாதார அமைச்சின் உயரதிகாரிகள், முன்னைநாள் சுகாதார அமைச்சர், அந்தக் குப்பிகளை வாங்கி நோயாளிகளுக்கு வழங்கிய மருத்துவ வழங்கல் பிரிவின் உயரதிகாரிகள் எனப் பலர் தற்போது போலி மருந்துக் குப்பிகளை உற்பத்தி செய்து வழங்கிய / வாங்கியதாகக் கடுமையான குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகி சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்தக் குற்றச்சாட்டுகள் நீதிமன்றத்தில் நிரூபிக்கப்பட்டால் இலங்கையில் இயங்கிய மிகப்பெரிய மருத்துவ மாபியாவாக இது இருக்கும்.

## கொரோனா கால மோசடி

கடந்த காலத்தில் கொரோனா உச்சத்தில் இருந்த போது பதவி வகித்த சுகாதார அமைச்சரும் அவருடன் இணைந்து செயல்பட்ட போலி வைத்தியர் ஒருவரும் ஒவ்வொரு நாளும் 4000 ரூபா பெறுமதியுடைய 5000 குப்பிகளை தம்மிக்க பாணி என்ற பெயரில் கொவிட் நோய்க்கான மருந்தாக விற்று அப்பாவி பொது மக்களிடம் நாள்தோறும் 20 மில்லியன் ரூபாய்களை ஏமாற்றியமை ஒரு மிகப்பெரிய மோசடி என்று கூறலாம். ஆனால் மருத்துவ மாபியா என்று அதை கூறமுடியாது . ஏனென்றால் வாங்குவோர் அந்த பாணியை வாங்கி பருகுமாறு பலவந்தப்படுத்த படவில்லை என்பதுடன் பலரும் தம்மிக்க ஒரு தகுதி வாய்ந்த மருத்துவர் அல்லர் என்ற உண்மையை அறிந்தே அதை பயன்படுத்தி இருந்தனர்.

## வடபகுதியில் மருத்துவ மாபியா

அதே வேளை மருத்துவ மாபியாவுக்கு சிறிய உதாரணம் ஒன்றைப் பார்ப்போம். உலகில் உற்பத்தி செய்யப்படும் மருந்துகள் அனைத்திற்கும் ஒரு பொதுப் பெயர் (Generic name) உண்டு. ஒரு பொதுப் பெயர் உள்ள மருந்தினைப் பல்வேறு நிறுவனங்கள் தத்தமது வியாபாரப் பெயரினைச் (Trade name/Brand name) சூட்டிச் சந்தைப்படுத்துவார்கள். மக்களுக்கு நன்கு பரிச்சயமான காய்ச்சல் நிவாரணி மருந்து "பனடோல்" ஆகும். பனடோல் என்பது நிறுவனத்தால் சூட்டப்பட்ட வியாபாரப் பெயர். குறித்த காய்ச்சல் நிவாரணி மருந்திற்குரிய பொதுப் பெயர் பரசிற்றமோல் என்பதாகும். நீங்கள் ஒரு மருந்தகத்திற்குச் சென்று பரசிட்டமோல் எனக் கேட்டால், விலை குறைவான காய்ச்சல்

தொடர்ச்சி ▼

# மருத்துவ மாபியா!



தொடர்ச்சி▲

நிவாரணி மாத்திரைகளை நீங்கள் வாங்கமுடியும்.

இதனாலேயே மருந்துகளைப் பரிந்துரைக்கும் போது வைத்தியர்கள் மருந்துகளுக்குரிய பொதுப் பெயரில் (Generic name) பரிந்துரைக்க வேண்டும் என்பது உலகளாவிய விதியாகும். இலங்கையில் 2015 ஆம் ஆண்டின் இலங்கை தேசிய ஔடதங்கள் அதிகாரசபை சட்டமூலம் இலக்கம் 5 இன்படி, வைத்தியர்கள் பொதுப் பெயரிலேயே மருந்துச் சிட்டைகளில் எழுதி வழங்க வேண்டும் எனவும், விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் வியாபாரப் பேரில் வழங்கப்படும் மருந்தினை வாங்குவதற்கு நோயாளியிடம் போதிய பணம் இல்லாத சந்தர்ப்பங்களில், மாற்றீடான விலை குறைவான வேறு மருந்தினை மருந்தாளர்கள் வழங்க வேண்டும் எனவும் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கில் எனது ஊருக்கு அண்மையில் உள்ள நகரம் ஒன்றில் குறித்த வியாபாரப் பெயர் கொண்ட குடல் புழுக்களுக்கான தனி குளிசை கொண்ட ஜபூச்சி மருந்துஸ 600 ரூபா படியும் 6 குளிசைகள் கொண்ட அட்டை 800 ரூபாவுக்கும் விற்கப்படுகிறது. அதேவேளை, வேறு ஒரு வியாபாரப் பெயரைக் கொண்ட குடல் புழுக்களுக்கான குளிசையானது 80 ரூபாவுக்குக் கொழும்பில் வாங்கக் கூடியதாக உள்ளது. கொழும்பில் 80 ரூபாவுக்கு வாங்க கூடிய மருந்தின் அதிக விலையுள்ள இன்னொரு நிறுவனத் தயாரிப்பு (brand) நன்கு திட்டமிடப்பட்ட வகையில் குறித்த பிரதேசத்தின் அனைத்து மருந்தகங்களிலும் அந்தப் பிரதேசத்தில் உள்ள வைத்தியர்களது ஆதரவுடன் விற்கப்பட்டால் அந்தக் கூட்டணியை மருத்துவ மாபியா என்று கூறலாம்.

### வைத்தியசாலை நிர்வாகச் சீர்கேட்டினால் பாடசாலை நாள்களில் ஏற்பட்ட ஏமாற்றம்

எனது ஹார்ட்லி கல்லூரிப் பாடசாலை நாள்களில் ஒருநாள் பல் வலி ஏற்பட்டு 1 மணியளவில் ஊறணி வைத்தியசாலைக்கு சென்ற போது அங்குள்ள பல் வைத்தியர் மதியம் 12 மணிக்கு பிறகு நோயாளிகளை பார்க்கமாட்டோம் என்று கூறி என்னைத் திருப்பி அனுப்பினார். பல வருடங்கள் கழிந்து நான் மருத்துவராகிய பின்னரே பல் வைத்தியர்களும் காலை 8-12 மணி வரையும் மற்றும் மாலை 2-4 மணி வரையும் வேலை செய்ய வேண்டும் என்பதை அறிந்து கொண்டேன். அன்று அந்த பல் வைத்தியர் செய்தது நிர்வாக சீர்கேடு என்று கூறலாமே ஒழிய மருத்துவ மாபியா என்று கூறமுடியாது.

### செவ்வாய் முதல் வியாழன் நோய் (Tuesday To Thursday Syndrome- TTTS)

10 வருடங்களுக்கு முன்னர் யாழ் மருத்துவ பீடத்தில் விரிவுரையாற்றுவதற்காகச் செவ்வாய்க்கிழமை அதிகாலை 5மணிக்கு கொழும்பில் இருந்து காங்கேசன்துறைக்குப் புறப்படும் நகர்சேர் கடுகதித் தொடரூந்தில் பயணம் செய்யும் போது யாழ்போதனா வைத்தியசாலை உட்பட வட மாகாணத்தை சேர்ந்த பல வைத்தியசாலைகளில் கடமையாற்றும் தென் பகுதியை சேர்ந்த வைத்தியர்கள் மற்றும் வைத்திய நிபுணர்களால் தொடரூந்து நிறைந்திருக்கும். அதேபோல் வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் இருந்து மதிய வேளையில் கொழும்பு நோக்கிப் பயணம் செல்லும் போது வட மாகாணத்தில் வேலை செய்யும் அதே வைத்தியர்கள் தென் பகுதியில் உள்ள தமது வீடுகளுக்குச் செல்வதைக் கண்டு வியப்படைந்தேன். காரணம் இவர்கள் தமது கடமை நிலையங்களில் செவ்வாய் மதியத்திலிருந்து வியாழன் மதியம் வரையே-அதாவது வாரத்தின் ஏழு நாட்களில், ஒரு முழு நாளும், இரண்டு அரை நாட்களும் மட்டுமே கடமையில் இருந்திருப்பார்கள்.

அதனைப் பொது வெளியில் கொண்டு வந்து, செவ்வாய் முதல் வியாழன் நோய் (Tuesday To Thursday Syndrome- TTTS ) எனப் பெயரிட்டதுடன், உரிய மருத்துவ நிர்வாகிகளது பார்வைக்கும் கொண்டு சென்றிருந்தேன். இருப்பினும் எந்த மாற்றமும் ஏற்படவில்லை.

### ஒன்றுவிட்ட இரண்டு கிழமை நோய் (Every Other 2 Week Syndrome EOWS )

கடமை நிமித்தமாக மன்னார் வைத்தியசாலைக்குச் சென்ற போது பல மருத்துவர்கள் மாதத்தில் இரண்டு வாரங்கள் மட்டும் வைத்தியசாலையில் கடமையாற்றுவதையும் பின்னர் அந்த மருத்துவர் வீட்டுக்கு சென்று இரண்டு வாரம் உத்தியோகப்பற்றற்ற விடுமுறையில் தங்கி நிற்கும் போது, முன்னதாக இரண்டு வார உத்தியோகப்பற்றற்ற விடுமுறையில் சென்றிருந்த இன்னொரு மருத்துவர் / மருத்துவ நிபுணர் வந்து அடுத்த இரண்டு வாரம் கடமை செய்வதையும் அவதானித்தேன்.

பின்னர் கிழக்கை சேர்ந்த வைத்தியசாலைகளில் வைத்திய நிபுணராக கடமையாற்றும் மருத்துவர்கள் பலர் கொழும்பில் உள்ள பல தனியார் வைத்தியசாலைகளில் வார நாள்களிலேயே நோயாளிகளை பார்ப்பதாக விளம்பரப்படுத்தப்பட்டு இருந்ததை அவதானித்தேன்.

மேலும் விசாரித்தபோது வடக்கைப் போலவே கிழக்கு மாகாணத்திலும் தென் பகுதியை சேர்ந்த மருத்துவர்கள் ஃமருத்துவ நிபுணர்கள் மாதத்தில் இரண்டு வாரமே வேலை செய்துகொண்டு, ஒரு மாதத்துக்கான சம்பளத்தையும், ஒரு மாதத்தில் வைத்தியர் ஒருவரால் பெறக்கூடிய மேலதிக வேலை

தொடர்ச்சி▼

# மருத்துவ மாபியா!



தொடர்ச்சி▲

நேரமான 120 மணித்தியாலங்களுக்கான கொடுப்பனவையும் பெற்றுக் கொள்வதுடன், கொழும்பில் தங்கியிருக்கும் நாள்களில் இவர்கள் பல தனியார் வைத்தியசாலைகளில் வேலை செய்து வருவதையும் அவதானித்தேன்.

இலங்கையில் பிரித்தானியர் காலத்தில் வைத்தியர்கள் மீதான நம்பிக்கை காரணமாக அவர்களது தினவரவுப் பதிவேட்டினை அவர்களே பதிந்து மாத முடிவில் மேலதிகாரிகளிடம் சமர்ப்பிக்கும் நடைமுறை காணப்பட்டது. அதுவே இது நாள் வரை நடைமுறையிலும் உள்ளது. கடவுளுக்குச் சமமான மதிக்கப்படும் வைத்தியர்கள் மனச்சாட்சிப்படி இந்தப் பதிவேடுகளைப் பேணிச் சமர்ப்பிப்பார்கள் என்ற கருத்தைப் பொய்யாக்கி வழங்கப்பட்ட சலுகையினையே உரிமையாக்கி பட்டவர்த்தனமாக மோசடி செய்யும் ஒரு கலாச்சாரத்தினை உருவாக்கிப் பாதுகாத்து வரும் மருத்துவர்களது தொழிற்சங்கத்தினரே மருத்துவ மாபியாக்கள் இலங்கையில் தோன்றி வளரக் காரணகர்த்தர்கள் ஆவர்.

## இலங்கையில் மருத்துவ மாபியாக்களின் உருவாக்கம்

இவ்வாறான அரச தாபன விதிக் கோவைகள் மற்றும் நிதி விதிகளுக்கு முற்றிலும் முரணாக நடந்து கொள்ளும் வைத்தியர்கள் மற்றும் நிபுணர்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்காது, கண்மூடி இக்குற்றங்களுக்கு உடந்தையாக மருத்துவ நிர்வாகிகள் இருப்பது ஏன் என நான் ஆராய்ந்தபோது, அதிகாரிகள் அனைவரும் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தினருக்கு (புஆமுஅ) பயந்தே அவ்வாறு நடந்து கொள்கிறார்கள் என்பதைக் கண்டு கொண்டேன்.

அத்துடன் மருத்துவ நிர்வாகத்தின் ஆரம்ப அலகான நோயாளர் விடுதிகளது நிர்வாகிகளான வைத்திய நிபுணர்களில் கணிசமானவர்கள் தனியார் வைத்திய சேவைகளையே தமது பிரதான தொழிலாகவும், அரச வைத்தியசாலைக் கடமைகளை பகுதிநேர தொழிலாகவும் கருதி செயற்படுவதால், விடுதிகளையும் நோயாளர்களையும் முகாமை செய்வதற்கு சாதாரண மருத்துவர்களிலும விடுதித் தாதியர்களிலும் தங்கியிருக்க நேரிடுகிறது. இதனால் வைத்திய நிபுணர்கள் தமது ஆளுகையின் கீழுள்ள ஆளணியினர் மீதான நிர்வாகப் பிடியினை இழப்பதோடு தமது விடுதியில் பணியாற்றும் எவர் மீதும் நடவடிக்கை எடுக்க முடியாத, அவர்கள் பக்கம் சாரந்து அவர்களைப் பாதுகாக்க வேண்டிய கையறு நிலைக்கு ஆளாகியுள்ளனர். இது மருத்துவ நிர்வாக அலகின் அடிமட்டத்திலேயே சீர்கேடுகளையும் கட்டுப்பாடின்மைகளையும் உருவாக்கிப் பலவீனமடைய வைத்துள்ளது.

மேலும், ஒழுங்காக வருகை தராத நிபுணர்கள் மற்றும் வைத்திய அதிகாரிகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்க முயற்சித்த மருத்துவ நிர்வாகிகள் மீது, சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தும் மருத்துவ தொழிற்சங்கத்தினர், அவர்களை அப்புறப்படுத்தி விட்டே மறுவேலை பார்ப்பார்கள் என்பதற்குப் பொத்துவில் தொடக்கம் பருத்தித்துறை வரை உதாரணங்களை நான் கேள்விப்பட நேரிட்டது.

இங்கே நோயாளிகளது நலன்கள் கவனத்தில் கொள்ளப்படாது, தொழிற்சங்கத்தினர், நிர்வாகிகள் ஆகியோரது தன்னலம் கருதிய கூட்டிணைவும் ஒருவகையான மாபியாவாகவே கருதப்பட வேண்டும்.

பல்வேறு குற்றச்சாட்டுகளுக்கு ஆளாகியவர்களுக்கு புகலிடம் கொடுத்துக் காப்பாற்றுவது, மருத்துவத்துறையில் உள்ள ஏனைய பிரிவு உத்தியோகத்தர்கள் தமது மேற்படிப்பு மற்றும் நலனோன்புகள் குறித்து தத்தமது தொழிற்சங்கங்கள் ஊடாக எத்தனிக்கும் போது அதனைத் தடுப்பது எனக் கடந்த காலங்களில் தனிக் காட்டு ராசாக்களாகச் செயற்பட்ட வைத்தியர்களது தனிப் பெரும் தொழிற்சங்கமானது ஏனைய தொழிற்சங்கங்களுக்கு தவறான முன்னுதாரணங்களை வழங்கியது.

இதன் ஒரு பரிணாம வளர்ச்சியாக, 2015 காலப் பகுதியில் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சர் ஒருவர் அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்திற்கு எதிராக பிற சுகாதாரத்துறை சார் தொழிற்சங்கத் தலைவர்களை வளர்த்தெடுத்தார்.

அவர்களும் விசுவரூபம் எடுத்து மருத்துவத் துறையில் அரச நிர்வாக நடைமுறைகளுக்குப் புறம்பான மாபியாத்தனமான நடைமுறைகளை நியதிகளாக்கி வருகின்றார்கள். இவர்களுடன் அரசியல்வாதிகளும் கூட்டிணைந்து பாரிய மாபியாக் கூட்டங்களாக மாறியுள்ளனர். இதனால் மருத்துவ நிர்வாகத்துறையானது ஒப்புக்குச் சப்பாணியான இறப்பர் முத்திரை நிர்வாகமாக மாறிப்போய் உள்ளது. இதன் இறுதி விளைவாக சுகாதார அமைச்சே சிறைச்சாலையில் அடைக்கப்படும் படுகேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுச் சந்தி சிரிக்கிறது.

## மருத்துவத்துறையின் பிற பிரிவு மாபியாக்கள்

சுகாதாரப் பணி உதவியாளர்கள் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மறுபெயரிடப்பட்ட சுகாதாரத்துறைச் சிற்றூழியர்கள் தமது கடமைப் பட்டியலுக்கு அமையச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய மறுத்துச் சவால் விடுத்து வருகிறார்கள். இவர்களில் கனிட்ட தரத்தினர்தான் வைத்தியசாலைகளது உட்புறங்களை அதாவது நோயாளர் விடுதிகள் உட்பட்ட சிகிச்சைப் பிரதேசங்களைத் தூய்மையாக்கும் பணிகளைச் செய்ய வேண்டியவர்கள். இவர்களுக்கு அதற்காகவே மாதாந்த வேதனம் மற்றும் படிகள் மக்கள்

தொடர்ச்சி▼

# மருத்துவ மாபியா!

தொடர்ச்சி▲

வரிப்பணம் மூலம் செலுத்தப்படுகிறது.

ஆனால் பல்வேறு அரசியல்வாதிகளது அடிவருடிகளாகச் சேவகம் செய்பவர்களுக்கு வைத்தியசாலைச் சிற்றூழியர்களாக நியமனம் வழங்கும் துர்ப்பாக்கிய அரசியல் கலாச்சராம் ஆரம்பித்ததுடன் வைத்தியர்களது தொழிற்சங்கம் வழங்கிய தவறான முன்னுதாரணங்களும் இணைந்து கொள்ள, சிற்றூழியர் தொழிற்சங்கங்களும் அரச தாபன விதிகளை மீறி தாமே தமக்கான விதிகளை வரைந்து கொண்டுள்ளனர்.

இதன் விளைவாக, 'வைத்தியசாலைகளது வெளிப்புறச் சுத்திகரிப்பிற்காகப் பணி அமர்த்தப்பட்டுள்ள ஒப்பந்தப் பணியாளர்கள் மூலமே வைத்தியசாலைகள் உட்புறச் சுத்திகரிப்புகளும் நடைபெற வேண்டும். எம்மால் தூய்மைப் பணிகளில் ஈடுபடமுடியாது' என்று சிற்றூழியர்கள் கைவிரித்து விட்டனர்.

இந்தச் சிற்றூழியர்கள் பணியமர்த்தப்பட்டது, பயிற்றப்பட்டது மற்றும் தற்செயலாக தொற்றுக்கு ஆளாகும் சந்தர்ப்பங்களில் இருந்து பாதுகாப்பதற்காக தடுப்பூசிகள் வழங்கப்பட்டது எல்லாம் அவர்கள் வைத்தியசாலைகளது உள்ளகத் தூய்மைப் பணியினை மேற்கொள்வதற்காகவே ஆகும். அவ்வாறு இருக்கையில் அப்பாவி ஒப்பந்தப் பணியாளர்கள் தமக்குப் பயிற்றுவிக்கப்படாத பணியில் பாதுகாப்பற்ற முறையில் பணிகளில் ஈடுபடுத்தப்படுவது பாரிய மனித உரிமை மீறலும் தொழிலாளர் சுரண்டல் ஆகும்.

இதற்கெல்லாம் சிகரம் வைப்பதுபோல சிற்றூழியர்கள் கடமை நேரத்தில் வைத்தியசாலைகளுக்கு வெளியே முச்சக்கர வண்டி செலுத்துவது மற்றும் பிற வேலைகளில் ஈடுபடுவது தெரிந்தும் மருத்துவ நிர்வாகிகள் கண்டும் காணாது உள்ளனர். காரணம், இது குறித்துக் கேள்வி எழுப்பினால், மருத்துவர்கள் கடமை நேரத்தில் வெளியே செல்வது குறித்து சிற்றூழியர்கள் எதிர்க் கேள்வி எழுப்புவார்கள் என்ற அச்சமே ஆகும்.

ஆரம்ப காலங்களில் நுணுக்குக் காட்டியினைப் பாவித்து இரத்தப் பரிசோதனை முதலானவற்றினை மேற்கொண்ட ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்களுக்கு, அவர்கள் குருதியில் உள்ள ஒவ்வொரு கூறினையும் ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கு கட்டணம் வழங்கப்பட்டது (piece rate). உதாரணமாக செங்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கையினைக் கண்டறிவதற்கு குறித்த தொகை, வெண்குருதிச் சிறுதுணிக்கைகளின் எண்ணிக்கைகளைக் கண்டறிவதற்குக் குறித்த தொகை எனக் கட்டணங்கள் கணக்கிடப்பட்டன.

தற்காலத்தில் சகல பரிசோதனைகளும் தானியங்கி இயந்திரங்கள் மூலமாகவே பெறப்படுகின்றன. மாதிரிகளை அவ்வியந்திரங்களில் இடுவதும், பின்னர் தன்னியக்கமாக அச்சிட்டு வழங்கப்படும் பரிசோதனை அறிக்கையில் கையொப்பம் இடுவதுமே ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் தற்போது செய்யவேண்டிய பணியாகும். அதிலும் பல வைத்திசாலைகளில் சிற்றூழியர்களே மாதிரிகளை இயந்திரத்தில் இட்டு, அறிக்கைகளைப் பெற்று வைக்க, ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் கையொப்பம் வைப்பது மட்டுமே கடமையாக உள்ளது.

இருப்பினும் கடந்த காலங்களில் பெற்றதைப் போலவே இயந்திரத்தினால் வழங்கப்பட்ட பரிசோதனை அறிக்கையில் உள்ள ஒவ்வொரு கூறுகளுக்கும் கட்டணங்களை ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்கள் பெற்று வருகிறார்கள். இது தொடர்பிலும் மருத்துவ நிர்வாகிகள் எவரும் எதுவும் செய்ய முடியாதவகையில் தொழிற்சங்க ஆதிக்கம் கட்டிப் போட்டுள்ளது.

இதன் பரிணாம வளர்ச்சியாக ஆய்வுகூடத் தொழில்நுட்பவியலாளர்களும் தற்போது கடமை நேரத்தில் அரச வைத்தியசாலைகளுக்கு வெளியே தனியார் நிலையங்களில் உள்ள ஆய்வுகூடங்களுக்குச் சென்று அங்குள்ள கடமைகளைப் பார்க்கும் அளவிற்கு வந்துள்ளது.

## நோயாளிகளின் துன்பத்தை அதிகரிக்கும் அரசியல்வாதிகள்

ஊழலில் ஈடுபட்டவர்களிடம் இருந்து பணத்தை மீள பெற்றுக் கொள்ளாமலும் பாதுகாப்பு செலவை குறைக்காமலும் அரசாங்க ஊழியர்களின் மீது சுமத்தப்பட்டுள்ள அண்மைக்கால வரி அதிகரிப்பு மற்றும் சுகாதார சேவைக்கான நிதிப்பற்றாக்குறை ஆகியன நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளது. ஒருபுறம் மருத்துவர்கள் பெற்று வந்த மாத வருமானமானது விதிக்கப்பட்டுள்ள வரி காரணமாகத் திடீரெனக் குறைவடைந்ததால், இதுவரையிலும் தனியார் துறையில் பணியாற்றாத வைத்தியர்களையும் பொருளாதாரச் சுமைகாரணமாகத் தனியார் துறையிலும் பணியாற்றுவதற்கு உந்தியுள்ளது.

மறுபுறம் அரசாங்கத்தினால் சுகாதார சேவைக்கு வழங்கப்படும் நிதி போதாமல் இருப்பதனால் சில ஆய்வுகூட பரிசோதனைகள், சத்திரசிகிச்சைகளுக்கான பொருட்கள் –உதாரணங்களாக கண் புரை சிகிச்சைக்கு வேண்டிய கண் வில்லைகள் எலும்பு முறிவு சிகிச்சைக்கு வேண்டிய திருகாணிகள் பல் வைத்தியத்துக்கு வேண்டிய மூலப்பொருகள் ஆகியன – அரசாங்க வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாக இருப்பதனால் தனியார் துறையில் இவற்றை பெற்று வருமாறு நோயாளிகளிடம் கூறும் நிலை உருவாகியுள்ளது அல்லது மேற்குறித்த பொருள்கள் அரச வைத்தியசாலைகளில் பற்றாக்குறையாக இருக்கும்

தொடர்ச்சி▼



# மருத்துவ மாபியா!

தொடர்ச்சி▲

நிலையில் நேர்மையான வைத்தியரும் தனியார் வைத்தியசாலைக்குச் செல்லுமாறு நோயாளியைக் கேட்டுக்கொள்ளும் துர்ப்பாக்கிய நிலையை ஏற்படுத்தியுள்ளது .

இதேவேளை எரியும் வீட்டில் பிடுங்கியது இலாபமாகத் தனியார் துறையுடன் இணைந்து தமது வருமானத்தை பெருக்கி கொள்ளும் இன்னொரு கூட்டம் நாடு பூராகவும் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகள் தனியார் வைத்தியசாலைக்குச் செல்வதற்கேற்றவாறு நிலைமைகளை செயற்கையாக உருவாக்குகிறது. உதாரணமாக "அரச வைத்தியசாலையில் உங்களது சத்திரசிகிச்சையை செய்ய விரும்பினால் செய்யலாம். ஆனால் நான் அதனைச் செய்ய மாட்டேன். பதிலாக பயிற்சி வைத்திய நிபுணரோ அல்லது சாதாரண வைத்தியரோதான் செய்வார்கள். அவ்வாறு அவர்கள் 'பழகும் போது' பாதிப்பு வந்தால் என்னைக் குற்றம் சாட்டக்கூடாது. நீங்கள் தனியார் வைத்தியசாலைக்கு வந்தால் நானே சத்திரசிகிச்சையைச் செய்துவிடுவேன்" என்று கூறுவது ஒருவகை.

இன்னொரு வகையினரோ எலும்பு முறிவு காரணமாக அனுமதிக்கப்பட்ட நோயாளிகளுக்கு அரசினால் நாளாந்தம் முப்பதிலிருந்து நாற்பது பிரசவங்கள் வரை நடைபெறும் ஒரு வைத்தியசாலையில், பல மில்லியன்கள் செலவில் மகப்பேற்றுப் பெண்ணோயியல் விடுதி மற்றும் மகப்பேற்றியல் சத்திர சிகிச்சைக் கூடம் ஆகியன அமைக்கப்பட்டுப் பல வருடங்களாகியும், அவற்றினைப் பாவனைக்குக் கொண்டுவராது, பதினாறு கட்டில்கள் மட்டும் கொண்ட, காற்றோட்டமோ முறையாக மலசலகூட வசதிகளோ அற்ற பிரசவத்தின் பின்னரான விடுதிக்குள்ளேயே அத்தனை பிரசவித்த தாய்மார்களையும் வைத்துப் பராமரிப்பது குறித்தும் நான் அறிந்துள்ளேன். இதற்குக் காரணம் கர்ப்பவதிகளுக்குச் சிரமத்தைக் கொடுத்து அவர்கள் மூலமாகவே தனியார் வைத்தியசாலைகளுக்குப் பிரசவத்திற்காகப் பிரதேச மக்கள் செல்லவேண்டும் என்ற தகவலைக் கூறவைக்கும் கபட நோக்கமேயாகும்.

### சாவகச்சேரிச் சம்பவங்கள் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஓர் ஆரம்பப்புள்ளி

வடக்கு, கிழக்கு மாகாண வைத்தியசாலைகள் 2009 வரை யுத்தம் என்ற பெயரில் அபிவிருத்தி அடையாமலும் பல வைத்தியசாலைகள் போரினால் சேதமடைந்தும் இருந்தன. யுத்தம் முடிந்து




மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்படும் திருகாணிகள் மற்றும் பட்டங்கள் (plates) இருந்தாலும், சத்திரசிகிச்சையினை மேற்கொள்ளாது தாமதப்படுத்துவார்கள். குறித்த நோயாளிகள் தினமும் சாப்பிடாமல் இருக்குமாறு கூறப்பட்டு, சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுக் காக்க வைக்கப்படுவார்கள். அவர்கள் பார்த்திருக்கும் போதே தனியார் துறையினரிடம் அதே திருகாணிகளையோ பட்டங்களையோ பணம் செலுத்திப் பெற்றுக் கொடுத்த நோயாளிகள் முன்னுரிமை கொடுக்கப்பட்டு சத்திர சிகிச்சைக் கூடத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு சத்திர சிகிச்சைக்கு உள்ளாக்கப்படுவார்கள். இறுதியாக அப்பாவி நோயாளியிடம் "இன்றைக்கு தியேட்டர் லிஸ்ற் முடிந்து விட்டது. இனி நாளைக்குத்தான்" என்று கூறி திரும்பவும் விடுதிக்கு அனுப்பப்படுவார்கள். இப்படி இரண்டு, மூன்று தினங்கள் கழிந்த பின்னர் உளவியல் ரீதியாகப் பணவசதி அற்றவர்களும் நகைகளை அடகு வைத்தோ காணியை விற்றோ தனியார் துறையினரிடம் பணம் செலுத்தி திருகாணிகளைப் பெறும் எண்ணத்திற்கு வந்துவிடுவார்கள். அந்தத் தருணத்திற்காக காத்திருந்தவராக விடுதியில் உள்ள முகவரான சுகாதாரத்துறைப் பணியாளர் அப்பாவி நோயாளியை அணுகிப் பேரம் பேசுவார்கள். பேரம் முடிந்தால் வெளியில் உள்ள தனியார் துறை முகவருக்குத் தகவல் அனுப்பப்பட்டு பணம் கைமாறியதும் மறுநாள் வெற்றிகரமாகச் சத்திர சிகிச்சை நடக்கும்.

இன்னொரு வகை மாபியாக்கள் அரச வைத்தியசாலைகளில் உள்ள வளங்களை மக்கள் பாவனைக்கு வரவிடாது சாதுரியமாகத் தடுத்துவிடுவார்கள். அதன் மூலம் தனியார் துறைக்கு நோயாளர்கள் வருமாறு செய்வதே அவர்களது நோக்கம். உதாரணமாக

2010 இல் இருந்து 2018 வரை பல நன்கொடையாளர்கள் வைத்தியசாலைகளுக்கு உதவத் தயாராகக் கதவு திறந்து இருந்த போதும் அரசியல்வாதிகளின் செல்வாக்கு காரணமாக சமத்துவமான (equity) சுகாதார சேவை வழங்கலுக்குரிய திட்டம் எதுவும் இன்றி கிடைக்கப்பெற்ற உதவிகள் சில வைத்தியசாலைகளுக்கு மட்டும் திசை திருப்பப்பட்டன.

அவ்வாறான திசை திருப்பப்பட்ட நிதியிலும் அரசியல்வாதிகள் ஊழல் செய்து தமது சட்டைப்பைகளை நிரப்பிக் கொண்டதாகப் பல குற்றசாட்டுகள் உள்ளன. 2019 இல் கொரோனா தாக்கம் ஆரம்பமானதுடன் வைத்தியசாலை அபிவிருத்திக்கான கதவுகள் மூடி கொண்டதுடன் அதன்பின் வங்குரோத்து நிலை ஏற்பட்டது.பின்னர் பதவிக்கு வந்த ரணிலின் அரசாங்கம் வரிகளை அதிகரித்ததனால் மருத்துவர்கள் பெருமளவில் வெளியேறத் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில், அண்மையில் தமது மருத்துவ நிர்வாக முதுகலைமாணிப் பாடநெறிகளைப் பயின்று இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய ஒரு தொகுதி பட்டப்பின்படிப்பு மாணவர்கள் அவர்களது பெறுபேறுகள் வெளியாக்குவதற்கு முன்னரேயே சுகாதார அமைச்சினால் தற்காலிக நியமனங்கள் வழங்கப்பட்டு அனுப்பப்பட்டனர். அவர்களில் ஒருவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் கடமைப்பொறுப்பு ஏற்ற பின்னர் நடைபெற்ற சங்கிலித் தொடரான சம்பவங்கள் அனைத்தும் மக்கள் வெளிப்படுத்திய / வெளிப்படுத்தி வரும் உணர்வுகளும் நான் இதுவரை விவரித்தவற்றின் இறுதி விளைவுகளாகும். அவ்வாறிருக்கையில் எவராவது உண்மை நிலையை மறைத்து

தொடர்ச்சி▼

# மருத்துவ மாபியா!

தொடர்ச்சி▲

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு விரைவில் சத்திர சிகிச்சை நிபுணர்களை நியமிக்க முடியும் என்று கூறுவார்களேயானால் அது முழுப் பொய்யாகும். அண்மையில் அந்த வைத்தியசாலைக்கு சென்று நேரடியாக பார்த்த போது சத்திரசிகிச்சை நிபுணர் மற்றும் மயக்க மருந்து வைத்தியர்கள் நியமிக்கப் படாத நிலையில் சத்திரசிகிச்சை கூடத்துக்குரிய உபகரணங்கள் பல வருடங்களாகப் பாவனையின்றி இருந்ததனால் பழுதடைந்து இருப்பதை கண்டு துயரடைந்தேன்.

### கூரை ஏறி கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டம் போவார்களாம்

பலிக்கடாவாக்கி, தான் வைத்தியசாலைகளுக்கு எதுவும் செய்யாததை மறைத்து தனது அதிகாரத்துக்கு கட்டுப்படாத மருத்துவ நிர்வாகிகள் மீது சேறு பூசி மகிழ்வார்.

### வடபகுதியின் சுகாதார சேவையை அழிக்கும் தமிழ் அரசியல்வாதிகள்

நடைமுறைச் சாத்தியமான தீர்வுகளை விடுத்து அரசியல்வாதிகள் தத்தமது ஊதுகுழல் ஊடகங்களைப் பயன்படுத்தி அனைத்து மருத்துவர்கள் மீதும் சேறு பூசி வருவது நேர்மையாக செயல்பட்ட மருத்துவர்களையும் வடக்கை விட்டு வெளியேற தூண்டியுள்ளது. இவர்கள் ஆதரவளிக்கும் அரசாங்கத்தின் செயல்பாடுகள் காரணமாகவே மருத்துவர்கள் வெளியே



நாள்தோறும் 350 மில்லியன் பெறுமதியான கடல் உணவை இந்திய இழுவைப்படகுகள் இலங்கை கடலில் கொள்ளையடித்து செல்லும் போது அதற்கு தீர்வு காண முடியாத மீன்பிடி அமைச்சர், அபிவிருத்திக் குழுத் தலைவர் என்ற கோதாவில் தனக்குச் சம்பந்தம் இல்லாத சாவகச்சேரி வைத்தியசாலைக்குள் கட்டப்பஞ்சாயத்து நடத்தி அதை முகப்புத்தகக் ஜகுயஉநடிழழம டளைநஸ காணொலியில் போட்டு ஆணவத்துடன் பெருமை அடித்துக் கொள்கிறார். வேண்டுமானால், 1995 தொடக்கம் அதாவது யாழ் மாவட்டம் அரச கட்டுப்பாட்டிற்குள் வந்தது தொடக்கம் 2019 வரை 25 வருடங்கள் அமைச்சராகப் பல்வேறு அரசுகளின் கீழ் பதவியில் இருந்தும் சாவகச்சேரி வைத்தியசாலையைத் திரும்பி பார்க்காத அமைச்சர் இப்போது தேர்தல் அண்மித்து விட்டதனால் என்ன மாதிரி ‘படம்’ போடுகிறார் என்று தமிழ் மக்கள் வியந்து கொள்ளலாம்.

சிங்கள மக்கள் வாழும் பகுதியில் சுகாதார துறையுடன் சம்பந்தப்படாத அமைச்சர் ஒருவர் இப்படியான அடாவடி நடவடிக்கையில் ஈடுபட்டால் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் ஜபுஆழுயுஸ என்ன செய்திருக்கும் என்று தமிழ் மருத்துவர்கள் எண்ணிப் பார்க்கவேண்டும்.

மற்றவர் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் தலைவர் பதவியில் இருந்தபோது எதுவும் செய்யாமல் மின்பிறப்பாக்கி ஒன்று சில வாரங்களுக்குள் வர போகிறது என்பதை முன்கூட்டியே தெரிந்து கொண்டு அந்த மூன்று வாரங்களுக்கு மின்பிறப்பாக்கி அனுப்புவாராம். பின்னர் மனக்குறையோடு இருக்கும் வைத்தியர்களை தனது தொலைக்காட்சியில் அதிகாரத்துடன் பேட்டி கண்டு அவர்களை

றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நேர்மையாக ஏற்றுக் கொண்டு அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்ற உரிய அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டும்.

வன்னியில் உள்ள பல வைத்தியசாலைகள் சாவகச்சேரி வைத்தியசாலையை விட மிகவும் கேவலமான நிலையில் உள்ளன. அதேவேளை கிழக்கு மாகாணம் உள்ளிட்ட பகுதிகளில் ஒன்று அல்லது இரண்டு மருத்துவர்களுடன் இயங்கிய பல சிறு வைத்தியசாலைகள் அந்தப் பகுதிகளை சேர்ந்த அரசியல்வாதிகளின் முயற்சியால் இன்று பல நிபுணர்களுடன் பெரிய வைத்தியசாலைகளாக அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

ஒரு தரப்பு தமிழ் தேசியம் பற்றி பேசி தமிழ் மக்களை உசுப்பேற்றுகிறது. அரசியலுக்கும் நடைமுறைக்கும் உள்ள வித்தியாசத்தினை மறந்து மத்திய அதிகாரம் மாநிலம் 13ஆம் திருத்தச் சட்டம் என்று வைக்கோற்பட்டடை நாய்களாகக் குழப்பியடித்து உழல்கிறது. மறு தரப்பு அரசாங்கத்துடன் இணைந்து தமிழ் மக்களை சுரண்டி தமது சட்டைப் பைகளை நிரப்பிக் கொள்கிறது.

### என்னதான் தீர்வு?

சாவகச்சேரி உட்பட வடபகுதி வைத்தியசாலைகளை இயங்கவைப்பதற்கும் மருத்துவ மாபியாவை ஒழிப்பதற்கும் என்னதான் தீர்வு ?

தற்போது உள்ள சூழ்நிலையில் நான் ஏற்கெனவே பதிவிட்ட படி அந்தந்த பகுதிகளை சேர்ந்த மருத்துவர்கள் சில மாத காலமாவது தமது சேவையை வழங்க முன்வரவேண்டும். அதை விடுத்து வெளிநாட்டில் வாழும் மருத்துவர்களும் தற்போது சேவையில் உள்ள

தொடர்ச்சி▼

# மருத்துவ மாபியா!

தொடர்ச்சி▲

மருத்துவர்களும், இயங்காத நிலையில் பழுதடைந்துள்ள சத்திரசிகிச்சை கூட உபகரணங்களுக்காக தம்மிடையே குற்றம் சாட்டிக் கொள்வது வேதனை அளிக்கிறது.

அரசாங்கத்துக்கு உண்மையில் மருத்துவர்களின் பிரச்சினைக்கு தீர்வு காண விருப்பம் இருந்தால் ஏனைய பல நாடுகளில் இருப்பது போல் அரசாங்க மருத்துவர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் தனியார் துறையில் வேலை செய்வது மற்றும் சுகாதார சேவையுடன் தொடர்பான மருந்தகங்கள், ஆய்வு கூடங்கள் மற்றும் தனியார் வைத்தியசாலைகளை நடத்துவது ஆகியனவற்றினை முற்றாகத் தடை செய்யப்பட வேண்டும்.

அதேவேளை அரசாங்க வைத்தியர்கள் மற்றும் மருத்துவத் துறை பணியாளர்கள் கௌரவமாகத் தமது குடும்பங்களைப் பராமரிப்பதற்கு அவர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்பட வேண்டும். மேலும் கடமை நேரத்தில் வைத்தியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் வைத்தியசாலையில் இருந்ததை உறுதிப்படுத்த ஊஊஊவுஏ உட்பட பல நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தலாம்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் உள்ளிட்ட மருத்துவ துறை தொழிற்சங்கள் தொழிற்சங்க விதிமுறைகள், தொழில் தர்மங்கள் ஆகியவற்றினை விளங்கி மக்களைப் பணயம் வைக்காது தமது உரிமைகளை வென்றெடுப்பது குறித்துச் சிந்திக்க வேண்டும். குறிப்பாக நிர்வாகத்தில் தலையீடு செய்வது, தவறு செய்தவர்களைக் காப்பாற்றுவது, அரச விதிமுறைகளை மீறுவதை ஊக்குவிப்பது ஆகியவற்றினை முற்றாகத் தவிர்க்க வேண்டும்.

அதேபோல் மருத்துவ பீட ஆசிரியர்கள் மற்றும் போதனா வைத்தியசாலையின் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் மாணவர்களுக்கு முன் உதாரணமாக செயல்பட வேண்டும். கடந்த காலத்தில் மனித உருவில் சேவையில் தெய்வங்களாக நடமாடிய தனியார்துறை வருமானத்தில் கிஞ்சித்தும் ஆசை கொண்டிராத சிவகுமாரன்,கணேசரட்ணம், சிவசூரியா போன்ற உயர்ந்த மனிதர்கள் எமக்கு முன்னுதாரணமாக செயல்பட்டார்கள்.

இன்று தனியார் வைத்தியசாலைகளில் தமது பகல் நேரக் கடமைகளை முடித்து விட்டு நள்ளிரவில் மருத்துவ மாணவர்களுக்கு கற்பிக்கத் தொடங்கும் மருத்துவர்களை பார்க்கும்போது கேவலமாக இருக்கிறது. இவர்களைப் பார்த்து வளரும் அடுத்த தலைமுறை பணத்திற்காகத் தறிகெட்டு அலைவது தவிர்க்க முடியாதது.

மருத்துவ நிபுணர்கள் கடமை நேரங்களில் முழுமையாகப் பணியாற்றினால், மருத்துவர்களிடம் கடமைப்பட வேண்டிய தேவை நேரிடாது. இதனால் செஞ்சோற்றுக் கடனுக்காக மருத்துவர்கள் மற்றும் ஏனைய பணியாளர்கள் செய்யும் விதிமீறல்களைக் கண்டும் காணாது விடவேண்டிய அவசியம் நேரிடாது. அதைவிட 4-6 மணி நேர மேலதிக கொடுப்பனவு பெற்றுக்கொள்ளும் வைத்தியர்கள் இரவு நேரத்தில் ஒரு தடவையாவது சிகிச்சைக்கள சுற்றுகளை (ward rounds ) செய்ய வேண்டும்.

குறிப்பாக சிறுவர்கள் மற்றும் ஊறு படும் நிலையில் உள்ள நோயாளிகளை இரவில் கவனிக்காமல் இருப்பதே பல குற்றச்சாட்டுகளுக்கும் வைத்தியர்களுக்கு எதிரான மக்களின் உணர்வுக்கும் காரணமாக உள்ளது என்பதையும் மருத்துவர்கள் புரிந்து கொள்ளவேண்டும்.




## சுங்க அதிகாரி திடீர் மரணம்

மத்தள சர்வதேச விமான நிலையத்தில் கடமையாற்றிய சுங்க அதிகாரி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

சுங்க அதிகாரிகளின் ஓய்வறையில் இருந்தபோது அவர் திடீரென உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்தவர் பன்னிபிட்டிய பகுதியைச் சேர்ந்தவர் என முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேற்படி அதிகாரியின் மரணத்திற்கான காரணம் இதுவரையில் தெரியவராத நிலையில் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை மத்தள பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

SRI LANKA POST

ශ්‍රී ලංකා තැපැල් දෙපාර්තමේන්තුව
இலங்கை அஞ்சல் திணைக்களம்
Department of Posts - Sri Lanka

## தபால் திணைக்களத்துக்குரிய தேர்தல் செலவு ரூ. 140 கோடி!

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தபால் திணைக்களத்துக்குரிய செலவு 1.4 பில்லியன் ரூபாவாக மதிப்பிடப்பட்டுள்ளது.

மேற்படி மதிப்பீடு தற்போது தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தபால் மா அதிபர் ஆர்.சத்குமார தெரிவித்துள்ளார்.

இது ஒரு மதிப்பீடு என்பதால் உண்மையான செலவில் மாற்றங்கள் ஏற்படலாம் எனவும் தபால் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.



# சிறுவர் மீதான பாலியல் துஷ்பிரயோகம் இந்த வருடத்தில் 290 முறைப்பாடுகள்!

இந்த வருடத்தின் முதல் 6 மாத காலப்பகுதியில் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பிலான 290 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இதன்படி கொழும்பு மாவட்டத்திலிருந்தே அதிகளவான முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து கம்பஹா மற்றும் குருணாகல் மாவட்டங்களிலிருந்தும் இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெறுகின்றன என சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை குறிப்பிட்டுள்ளது.



# பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுகள் விற்பனை 11,261 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்கு

கடந்த ஆறு மாதங்களில் மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உணவுகளை விற்பனை செய்த 11,261 வர்த்தக நிலையங்களுக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இலங்கைப் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன இதனைத் தெரிவித்துள்ளார்.

பொதுச் சுகாதார பரிசோதகர்களால் முன்னெடுக்கப்பட்ட சோதனையின்போது சுகாதாரமற்ற முறையிலும், காலாவதியான திகதியுடனும் உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த சில வர்த்தகர்கள் இனங்காணப்பட்டுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் உணவுப் பொருள்களைக் கொள்வனவு செய்யும்போது, அவற்றின் தரம் தொடர்பில் மிகுந்த அவதானம் செலுத்த வேண்டும் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன கோரியுள்ளார்.

# 2023 இன் முதல் 10 மாதங்களில் 488 கொலை சம்பவங்கள் பதிவு

கடந்த 2023 ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் சுமார் 488 கொலை சம்பவங்கள் பதிவாகியுள்ளன என தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவற்றில் 52 மரணங்கள் துப்பாக்கிச் சூடு காரணமாக இடம்பெற்றுள்ளன எனத் தெரியவந்துள்ளது.

அதேநேரம் தங்காலை, நுகேகொட, கம்பஹா, இரத்தினபுரி மற்றும் எல்பிட்டிய ஆகிய ஐந்து காவல் பிரிவுகளிலேயே அதிகளவான கொலைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.07.2024


மேஷம்

இன்று சில சௌகரியங்களை தியாகம் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்படும். திறமையான திட்டமிடல் மூலம் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடையலாம். ஆன்மீகம் சம்பந்தமான பயணங்கள் இன்று உங்களுக்கு ஆறதலையும் திருப்தியையும் அளிக்கும்.

பணியில் அமைதியின்மையும் பதட்டமும் காணப்படும். அதிக வேலைச் சுமை கவலையை அளிக்கும்.

உங்கள் முனைப்பான உணர்வுகளை உங்கள் துணையிடத்தில் நீங்கள் வெளிப்படுத்தலாம். இது நல்லிணக்கத்தை பாதிக்கும் என்பதால் இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நலம்.

பணவரவு உறுதியற்ற நிலையில் காணப்படுகிறது. பெருகிவரும் செலவினங்களால் கவலை ஏற்படும்.

தொண்டை வலிக்கான வாய்ப்புகள் காணப்படும்.


ரிஷபம்

இன்றைய நாள் திருப்திகரமாக இருக்காது. அவநம்பிக்கை உணர்வுகள் உங்களை வளரவிடாமல் தடுக்கும். பிறருடன் பேசும் போது கவனமாகப் பேச வேண்டும். கவனக்குறைவான பேச்சுக்களுக்கான வாய்ப்புகள் உள்ளன. தியானம் மேற்கொள்வது பயனளிக்கும்.

பணிச்சூழல் ஊக்கமளிக்கக் கூடியதாக இருக்காது. குறித்த நேரத்தில் பணிகளை முடித்தாலும் பணியில் தவறுகள் காணப்படும்.

உங்கள் மனதில் ஏற்படும் மாறுபாடுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக்கொள்வதன் மூலம் நல்ல பலன்களைக் காணலாம்.

பெருகி வரும் செலவினங்களால் சேமிப்பதற்கான வாய்ப்பு குறைந்து காணப்படும்.


மிதுனம்

இன்றைய நாள் மகிழ்ச்சிக்கான மற்றும் மறக்க முடியாத நினைவுகளை அளிக்கும் நாளாக அமையும். புதிய தொடர்புகள் உருவாக்குவதும் சமூகக் கூட்டங்களில் கலந்து கொள்வதும் உங்களை மகிழச் செய்யும்.

பணிச்சூழல் காரணமாக உங்கள் செயல்பாட்டில் தாமதம் காணப்படும். பணியில் திட்டமிடலும் ஒழுங்கமைத்தலும் வெற்றிக்கு வழிவகுக்கும்.

இன்று எளிதில் கோபத்துக்கு ஆளாவீர்கள். உங்களின் இந்த உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவதன் மூலம் உங்கள் துணையுடனான நல்லுறவு பாதிக்கப்படும். மகிழ்ச்சியுடன் இருக்க இத்தகைய உணர்வுகளை கட்டுப்படுத்த வேண்டும்.

பணப்புழக்கம் குறைவாக காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காரணமாக செலவுகள் அதிகரிக்கும்.


கடகம்

இன்று உங்கள் செயல்களில் விரைந்து முடிவெடுக்க சாதகமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். பயணங்களால் நல்ல பலன் கிடைக்கும்.

பணியிடத்தில் திறமையுடன் பணியாற்றுவீர்கள். உங்கள் செயல்பாட்டுக்கு மேலதிகாரிகளிடமிருந்து அங்கீகாரம் கிடைக்கும்.

உங்கள் துணையிடம் வெளிப்படையான மகிழ்ச்சியான உணர்வுகளை வெளிப்படுத்துவீர்கள். இருவரும் ஒருங்கிணைந்து மகிழ்வாக இருக்க இது உதவும்.

நிதிவளர்ச்சி மகிழ்ச்சியை அளிக்கும். ஆக்கமான விஷயங்களுக்காக இன்று பணத்தை செலவு செய்வீர்கள்.

நல்ல ஆரோக்கியம் காணப்படும். மனதைரியத்துடன் இருந்தால் நல்ல தேக ஆரோக்கியம் சாத்தியமாகும்.


சிம்மம்

இன்றைய நாள் துடிப்பான நாளாக இருக்கும். இன்று சந்தோஷமான மனநிலையில் இருப்பீர்கள். உங்களிடம் தலைமை பொறுப்பிற்கான தகுதி காணப்படும். அதனால் உங்கள் தகுதி உயரும்.

பணிச்சூழல் மகிழ்ச்சிகரமாக அனுபவிக்கத்தக்கதாக காணப்படும். குறித்த நேரத்திற்குள் விரைந்து பணியை முடிப்பது உங்கள் தன்னம்பிக்கையை அதிகரிக்க உதவும்.

உங்களின் மகிழ்வான பேச்சு உங்கள் துணையாரை மகிழ்விக்கும். மற்றும் திருப்தியை அளிக்கும் உங்கள் அன்பான அணுகுமுறை உங்கள் துணையுடனான பிணைப்பை வலுவாக்கும்.

இன்று பணம் உபரியாக காணப்படும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். உங்களால் சேமிக்கவும் முடியும்.

இன்று நல்ல ஆரோக்கியம் காணப்படும்.


கன்னி

உங்கள் செயல்களில் கவனமாக இருக்க வேண்டும். உணர்ச்சிவசப்படுதலை தவிர்க்க வேண்டும். உங்கள் செயல்களில் வெற்றி பெற திட்டமிட்டு செயலாற்ற வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இது உகந்த நாள் அல்ல.

அதிகமான பணிச்சுமை உங்கள் கவலையை அதிகரிக்கும். பணியில் தவறுகள் நேர வாய்ப்பு உள்ளன.

உங்கள் துணையுடன் நட்புணர்வை பகிர்ந்து கொள்ள வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை தக்க வைத்துக் கொள்ள இது மிகவும் முக்கியம்.

பணப்பற்றாக்குறை உங்களுக்கு கவலையை அளிக்கும். இன்று அதிகரிக்கும் பொறுப்புகளால் ஏற்படும் செலவினங்களை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

மனஅழுத்தத்தின் காரணமாக முதுகுவலி ஏற்படலாம்.


துலாம்

இன்று சற்று மந்தமாக காணப்படும். இன்று உங்கள் மனதில் எழும் கேள்விகளுக்கு பதில் கிடைப்பது அரிது. இதனால் குழப்பமான மனநிலை காணப்படும்.

பொறுமையான அணுகுமுறையுடன் பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். சகஊழியர்களுடன் சில தொந்தரவுகளை சந்திக்க நேரலாம்.

தொடர்பாடலில் காணப்படும் இடைவெளி காரணமாக துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும் உங்கள் துணையாரின் கருத்துக்கு முரணான கருத்தை வேறு விதமாக பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதிநிலைமை ஏமாற்றத்தை அளிக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்யவும் கூடுதல் செலவினங்களை கையாளவும் கடன் வாங்க நேரிடலாம்.


விருச்சிகம்

இன்று உங்களுக்கு பல வாய்ப்புகள் கிடைக்கும். அதனை பயன்படுத்தி இன்றைய நாளை அனுகூலமாக்கிக் கொள்ளுங்கள்.

இன்று உங்கள் மனதில் பல எண்ணங்கள் உருவாகும். அதன் மூலம் உங்கள் தனித்தன்மையை வெளிப்படுத்துவீர்கள். அதற்குரிய பாராட்டும் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் இன்று தேவையற்ற விஷயங்களுக்காக சூடான வாக்குவாதத்தில் ஈடுபட நேரிடலாம்.

இன்று சேமிப்பு அதிகரிக்கும். உங்கள் கடின உழைப்பிற்கு இன்று கூடுதல் பணவரவும் சலுகைகளும் கிடைக்கும்.

இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள். ஆரோக்கியத்தில் எந்தவிதமான குறைபாடுகளும் இருக்காது.

# இன்றைய ராசி பலன்கள் - 29.07.2024




இன்று வேலைகளை எளிதாகச் செய்ய முடியாத அளவுக்கு கடினமான சூழ்நிலை காணப்படும். திட்டமிட்டு வேலை செய்வதன் மூலம் வெற்றி காணலாம். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

பணியில் முற்போக்கான பலன்கள் கிடைக்காது. உங்கள் ஆர்வத்தை அதிகரிக்கச் செய்யும் வேறு வேலை மாற்றம் உங்களுக்கு தேவைப்படும்.

உங்கள் துணையிடம் உணர்ச்சிவசப்படுவீர்கள். இது நல்லுறவை மிகவும் பாதிக்கும் எனவே உங்கள் உணர்ச்சிகளை கட்டுப்படுத்துவது மிகவும் நல்லது.

நிதிவளர்ச்சி ஏமாற்றத்தை அளிக்கும். கூடுதலான தேவையற்ற செலவினங்களை சமாளிக்க வேண்டியிருக்கும். இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.




இன்று உங்கள் பணிகள் முடிக்கப் படாமல் இருக்கும். இன்றைய விளைவுகள் உங்களுக்கு சாதகமாக அமையாது என்ற காரணத்தினால் உங்கள் எதிர்பார்ப்புகளை குறைத்துக் கொள்வது சிறந்தது.

பணியில் முன்னேற்றம் காண நம்பிக்கையுடனும் சாந்தமாகவும் பணியாற்ற வேண்டும். உங்கள் செயல்திறன் மீது உங்களுக்கு அதிருப்தி நிலவும்.

உங்கள் துணையுடன் வெளியிடங்களுக்கோ அல்லது புனித ஸ்தலங்களுக்கோ சென்று மகிழ்வீர்கள். மகிழ்ச்சியான ஒரு நல்ல நிலை காணப்படும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும். இருக்கும் பணத்தை கவனமாக பாதுகாக்க வேண்டும். சேமிக்க வேண்டும்.

இன்று மிதமான ஆரோக்கியம் காணப்படும்.




இன்று செய்யும் அனைத்து செயல்களிலும் நடைமுறை அணுகுமுறையை கையாள வேண்டும். உங்களை உற்சாகப்படுத்திக்கொள்வதன் மூலம் சோர்வை வென்று நம்பிக்கையுடன் இருக்கலாம்.

அதிக பணிச்சுமை கவலையை அளிக்கும். இது பாதுகாப்பற்ற உணர்வை ஏற்படுத்தும். இந்த உணர்வு காரணமாக உங்களால் திறமையாக பணியாற்ற இயலாது.

நீங்கள் விஷயங்களை மிகவும் தீவிரமாக எடுத்துக் கொள்வீர்கள். நல்லுறவிற்கு எதையும் எளிதாக எடுத்துக்கொள்ளும் அணுகுமுறை தேவை. குழப்பமான மனநிலை காரணமாக உங்கள் துணையுடன் விவாதத்தில் ஈடுபடுவீர்கள்.

நிதிவளர்ச்சி திருப்தி அளிக்கும் வகையில் இருக்காது.




மிகவும் பொறுமையுடன் இருக்க வேண்டும். வாழ்க்கையில் சாதாரணமான அணுகுமுறை வேண்டும். ஆன்மீக காரியங்களில் நேரத்தை செலவழிப்பதன் மூலம் உங்களுக்கு வளர்ச்சி கிடைக்கும்.

பணியில் முன்னேற்றகரமான பலன்கள் காணப்படும். புதிய வேலைவாய்ப்பிற்கான வாய்ப்புகள் சாத்தியம். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

உங்கள் துணையுடன் நன்றாகப் பேசி நட்புணர்வுடன் இருக்க வேண்டும். உறவில் நல்லிணக்கத்தை பராமரிக்க இது அவசியம்.

பணப்புழக்கம் இன்று மகிழ்ச்சியை அளிக்கும் வகையில் இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும். பணத்தை சரியான முறையில் பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.





